# வட பகுதி பஸ் ஊழியர் வேலை நிறுத்தம் முடிவடைந்தது

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★





# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 263
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 16 ரமழான் 2 திங்கட்கிழமை (2-11-70)





## ஊழியருக்கு பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம் திங்கள் சுமார் 32மணி நேரத்தின் பின் யாழ்ப்பாணத்தில் பஸ் போக்குவரத்துச் சேவை இன்று அதிகாலை 4 மணிக்கு ஆரம்பமானது. நேற்று முன்தினம் இரவு சுமார் எட்டுமணியளவில் வேலை நிறுத்தம் ஆரம்பித்த யாழ் இ. போ. சபை ஊழியர் இன்று அதிகாலை வேலைக்குத் திரும்புகின்றனர்.

பஸ்ஊழியர் ஒருவருக்கும் பிரயாணியொருவருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாகமாறி பிரயாணிகளுக்கும் இ. போ. ச ஊழியர்களுக்குமிடையில் பெரும் மோதலாக உருவெடுத்து யாழ். நிலையம் யுத்தகளமாகமாறியது. நேற்று முழுவதும் பஸ் சேவை நடைபெறவில்லை. பாடசாலைமாணவமாணவிகள் மற்றும் பொதுமக்கள் தனியார் மோட்டார் வான்கள் வாடகைக் கார்கள், லொறிகள் ஆகியவைகளில் பிரயாணம் செய்தனர். நேற்றுமுன்தினமிரவு நடைபெற்ற மோதலில் இருபத்திரண்டு பஸ்கள் சேதமடைந்ததாகவும் 14 பஸ்கள் பெரும் சேதமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இலங்கை போக்குவரத்து

(4-ம் பக்கம் பார்க்க)

### மேலும் ரூ. 3 லட்சம் வெளிப்பட்டது

கொழும்பு ஞாயிறு

பணத்தைப் பதுக்கியவர்களை கண்டுபிடிக்கும் திடீர் சோதனைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

இன்று மேலும் 30 லட்சம் ரூபா பதுக்கல்பணம் வெளியே கொண்டுவரப்பட்டது. (சி பி ஏ)

### தப்பிச்செல்ல திட்டமிட்டுள்ளனராம்

கொழும்பு, ஞாயிறு

தற்காலிக வாசகால பெர்மிட்டில் உள்ளவர்கள் குறிப்பாக ஈடுபிடிக்கும் தொழிலிலுள்ளவர்கள் இலங்கையில் தங்களுடைய பொறுப்புகளை தட்டிக் கழித்துவிட்டு தப்பிச் செல்வதற்கு திட்டமிடுவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் இவர்கள் சம்பந்தமாக முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கும்படியும் ஸ்ரீலங்கா சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம் பாதுகாப்புவெளி விவகார அமைச்சைக் கேட்டுள்ளது. (சி. பி. ஏ)

# பழைய நோட்டுகளை மாற்றுவதற்கு கடைசித்தினம் இன்று!

## வங்கியில் கணக்குள்ளோர் 25 வரை போடலாம்!!

கோட்டை, திங்கள்

**பழைய 100, 50 ரூபா நோட்டுகள் இன்று மாலை 4-30 மணிக்குப் பின்னர் வங்கிகளில் மாற்ற முடியாது. ஆனால் வங்கிகளில் கணக்கு வைத்திருப்போர் மட்டும் நாளைமுதல் இம்மாதம் 25-ம் திகதி வரை பழைய நோட்டுகளை வங்கிகளில் போடலாம்.**

5 ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த தொகையைப் பழைய நோட்டுகளில் முதல் தினத்தன்று வங்கிகளில் நடைமுறை சேமிப்புக் கணக்குகளில் போட்டவர்கள் முழுத் தொகையையும் நேற்று முதல் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

இதற்கு மேலான தொகை முடியும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

பழைய 50, 100 ரூபா நோட்டுக்கள் 2-ந் திகதிக்குப் பின் செல்லுபடியாகாதென்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பழைய நோட்டுக்களை பலர் வங்கிகளில் நடைமுறை சேமிப்புக் கணக்குகளில் போட்டார்கள். முதல் தினத்தன்று ...யையும் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இன்று கடைசி

பழைய 100, 50 ரூபா நோட்டுகள் வங்கிகளில் கொடுத்து மாற்றுவதற்கான கடைசித் தினம் இன்றாகும். ஆனால் இம்மாதம் 25-ந் திகதி வரை

### 'அந்நிய வங்கிகள் தேசியமயம்''

கொழும்பு, ஞாயிறு

அடுத்த ஆண்டுமுடிவுக்குள் வெளிநாட்டவரின் வங்கிகள் யாவும் தேசியமயமாக்கப்பட்டு விடும் என்று கட்சிக்கூட்டத்தில் வீடமைப்பு அமைச்சர் திரு பீட்டர் கெனமன் கூறியதாக கம்யூனிஸ்கட்சித் தினப்பத்திரிகையான 'அத்தா'வில் செய்தி வெளிவந்திருக்கின்றது. (சி பி ஏ)

## 200 இ. போ. ச. ஊழியர் தற்காலிக வேலை நீக்கம்!

கோட்டை, ஞாயிறு

பழைய 100, 50 ரூபா நோட்டுக்களை மாற்றிக் கொடுப்பதற்கு இ.போ.ச. பணத்தைப் பயன்படுத்தினுர்கள் எனக் கருதப்பட்ட 200 பேரை இ. போ. ச. தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது. இவர்களில் இ. போ ச. டிப்போ சுப்பிரிண்டெண்ட், கண்டெக்டர், காசாளர் ஆகியோர் உள்ளனர்.

இப்பொழுதுநடைபெறும் விசாரணைகளைத் தொடர்ந்து இன்னும் சில நாட்களில் மேலும் சிலர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்படுவார்கள் என இ. போ. ச. உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 'பாரபட்சமற்ற விசாரணை வேண்டும்'

யாழ். மேயர்

யாழ்ப்பாணம், திங்கள் ... பிரயாணிகள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று ...

யாழ்ப்பாணம்பஸ்நிலையத்தில் நேற்றுமுன் தினம் நடை... நேற்று ...

### வடபகுதி பொலிஸ் அதிபரிடம் பொது மக்கள் கோருகின்றனர்:

# இ.போ.ச. பஸ்களில் பிரயாணம் செய்ய பாதுகாப்பு வேண்டும்!'

யாழ்ப்பாணம், திங்கள்

இ போ ச பஸ்களில் பிரயாணம் செய்யும் தங்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமென பொதுமக்கள் பலர் வடபகுதி பொலிஸ் அதிபரிடம் கோரியுள்ளனராம்.

பஸ்களில் அச்சத்துடன் பயணம் செய்ய வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதாகவும், தங்களுடன் சில பஸ்கண்டக்டர்களும், சார... போவதாக வடபகுதி பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

### அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கை

அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் வடபகுதி இ போ ச ஊழியர்கள் இறங்கியிருக்கின்றனரா? என்பது குறித்து தீவிர விசாரணை செய்யுமாறு வட... விக்கலாமென்றும் பொலிஸ் அதிபர் தெரிவிக்கிறார்.

### விசாரணை வேண்டும்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நடந்த சம்பவம் பற்றி பகிரங்க விசாரணை நடாத்தும்படி யாழ். கல்வி திணைக்கள பஸ் பிரயாணிகள் சங்கம் இலங்கை போக்குவரத்து சபைத்தலைவரைக் கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினத்தன்று வங்கிகளில் நடைமுறை சேமிப்புக் கணக்குகளில் போட்டவர்கள் முழுத் தொகையையும் நேற்று முதல் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

இதற்கு மேலான தொகையைப் பெற விரும்புவோர் வருமானவரி இலாகா அனுமதி வழங்கிய பின்னரே பெற்றுக்கொள்ள

நோட்டுகள் 2-ந் திகதிக்குப் பின் செல்லுபடியாகாதென்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பழைய நோட்டுக்களை பலர் வங்கிகளில் நடைமுறை சேமிப்புக் கணக்குகளில் போட்டார்கள். முதல் தினத்தன்று 5 ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த தொகையை போட்டவர்களுடைய பணத்தின் முழுத்தொகை

இன்று கடைசி

பழைய 100, 50 ரூபா நோட்டுகள் வங்கிகளில் கொடுத்து மாற்றுவதற்கான கடைசித் தினம் இன்ருகும். ஆனல் இம்மாதம் 25-ந் திகதி வரை தங்களது பெயரில் பழைய 100, 50 ரூபாய் நோட்டுக்களை வங்கிகளில் போடலாம். (4-ம் பக்கம் பார்க்க)

# வல்வை வர்த்தகர் கைது!

## நோட்டுகளை மாற்றுவதில் மோசடி?

யாழ்ப்பாணம், திங்கள்

**வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவர் காசு மாற்ற மோசடி செய்ததாக பொலிசாரினுலும் கடற்படையினராலும் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.**

யாழ்ப்பாணத்திலும் வல்வெட்டித்துறையிலும் பொலிசார் நேற்றுப் பல வீடுகளையும் கடைகளையும் சோதனையிட்டனர். யாழ்ப்பாணப் பகுதியில் பல கார்களையும் சோதனையிட்டனர்

பலர் நோட்டுகளை பதுக்கி வைத்திருப்பதாக ஏராளமான புகார்கள் கிடைத்திருப்பதாகவும் தகுந்த ஆதாரத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும்பொலிசார் தெரிவித்தனர்.

பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தினுல் நேற்றுவங்கிகளின் முன்னுல் கியூ வரிசை சிறியதாகவே காணப்பட்டது. கிராமப்பகுதியிலுள்ள பலர் வங்கிகளுக்கு வருவதற்குப் பெரும் கஷ்டப்பட்டனர், சிலர் வாடகைக்கார்கள் மூலம் வந்தனர்.

இலங்கை வங்கிக்கு முன் கியூ வரிசையில் நேற்றுப் பாடசாலை மாணவிகளும் புத்தகங்களுடன் நின்றனர். ஒரு குடும்பத்திலுள்ள 7 பேரும் காசு மாற்ற வந்திருப்பதாக வங்கி ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

தபால் கந்தோர் சேமிப்பு வங்கியில் பணம் போடுவதற்கு நேற்றுஏராளமானேர் திரண்டிருந்தனர். தபால் கந்தோர் சேமிப்புப் புத்தகம் இல்லாதவர்களும் புதிதாக உடனடியாக 200ரூபா உப-தபால் கந்தோர்களில் போடலாமென்றும் இவற்றிற்கு பழைய 100, 50ரூபா நோட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும் தபால் கந்தோரைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

நோட்டுகளை மாற்றுவதற்கு இன்றுதான் கடைசித் தினமாகும்.

## நாடெங்கிலும் நடந்த 'வேட்டை'!

நாடு முழுவதிலும் நடந்த திடீர் சோதனைகளில் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கோட்டையில் வைத்து ஆறுபேர் இன்று காலை கைதுசெய்யப்பட்டனர். தவருன உறுதி உரை அளித்ததைத் தொடர்ந்து இவர்கள் பொலிசாரிடம் சிக்கினர்.

காலியில் வங்கிக் கியூவில் நின்றுகொண்டிருந்த சிலரிடம் பழைய ரூபாய் நோட்டுக்களை விநியோகித்ததாக சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சகோதரரின் கூப்பனுடன் வந்தாராம்! சிக்கினர்!!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வங்கியில் நேற்று ஒருவர் பழைய நோட்டு மாற்றச் சென்ற சமயம், மோசடி செய்ய முயன்றதாக கண்டுபிடிக்கப்பட்டார். இவர் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின் தடுத்து வைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் தனது கூப்பனுடன் வந்து இவர் கூப்பன் மாற்றியதாகவும், நேற்றையதினம் தமையனின் கூப்பனைக் கொண்டு வந்து காசுமாற்ற முயன்றபோது சிக்கிக்கொண்டார் எனக் கூறப்படுகிறது.

தமையனின் கூப்பனுடன் பழைய 100 ரூபா மாற்ற வந்த இவரை வங்கி ஊழியர்கள் அடையாளம் கண்டுகொண்டதாகவும் விசாரணை செய்யப்பட்டபோது அவர் முதல்நாள் தனது கூப்பனுடன் காசுமாற்றிய விபரம் தெரிய வந்தாகவும் கூறப்படுகிறது.

புதிய சட்டத்தின்கீழ், இவர்மீது வழக்கு தாக்கல் செய்யப்படுமென பொலிசார் தெரிவித்தனர்.

# விசாரணை வேண்டும்'

— யாழ். மேயர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம்பஸ்நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கைகலப்புச்சம்பவம் பற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்தவேண்டுமென்று யாழ்.நகரமேயர் திரு.தா.சதுரைராசா இ.போ சபைத் தலைவரை நேற்றுத் தந்தி மூலம் கேட்டுள்ளார்

யாழ்ப்பாணம் இ. போ. சபை ஊழியர்கள் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொள்கிருர்களென்றும் அடிக்கடி பிரயாணிகள் துன்புறுத்தப்படுகிருர்களென்றும் நேற்று முன்தினம் நடந்த சம்பவத்தின்பின் யாழ்ப்பாணத்தில் பஸ் சேவை நடைபெறவில்லையென்றும் மீண்டும் ஆரம்பிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கும் படியும் நிலைமை மேலும் மோசமாகாமல் தடுக்கும் படியும் இ.போ சபைத் தலைவரை யாழ்.மேயர்தமது தந்தியில் கேட்டுள்ளார்

## பஸ்சேவைச் சீர்கேட்டுக்கு ஊழியர்களே காரணமாம்

நல்லூர், திங்கள்

அரசியல் தலையீடுகாரணமாகவும், பஸ் ஊழியர்கள் ஒத்துழைக்காததாலும்தான் பஸ் சேவை மே மாதம் 28-ம் தேதிமுதல் இன்றுவரை ஒழுங்காக நடைபெறவில்லை.

கோண்டாவில் டிப்போ பஸ் தொழிலாளர் மன்றக் கூட்டத்தில், டிப்போ உதவி அதிபர் திரு. தியாகராசா மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தலைவராக திரு. ரி. பத்மநாதனும், செயலாளராகவும், பொருளாளராகவும் திரு பீதாம்பரமும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

பஸ்தொழிலாளர் மன்ற கூட்டம் இன்று தொடர்ந்து நடைபெறும்.

வடபகுதி பொலிஸ் அதிபரிடம் கோரியுள்ளனராம்.

பஸ்களில் அச்சத்துடன் பயணம் செய்ய வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதாகவும், தங்களுடன் சில பஸ்கண்டக்டர்களும், சாரதிகளும் ஒழுங்கற்ற முறையில் சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்ளுவதாகவும் பல புகார்கள் வடபகுதி பொலிஸ் அதிபருக்குக் கிடைத்துள்ளனவாம்.

தமது பெண்பிள்ளைகளை பஸ்களில் அனுப்புவதற்குத் தமக்குப் பயமாக இருப்பதாகவும், பஸ் கண்டக்டர்கள், சாரதிகள் அவர்களுடன் கண்ணியமற்ற முறையில் நடந்து கொள்வதே இதற்குக் காரணமென்றும் பல பெற்ருேர் புகார் செய்துள்ளனராம்.

இப்படியான புகார்கள் குறித்து இனிக் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப் எதிரான நடவடிக்கைகளில் அரசாங்கத்துக்குஎதிரான நடவடிக்கைகளில் வடபகுதி இ போ ச ஊழியர்கள் இறங்கியிருக்கின்றனரா? என்பது குறித்து தீவிர விசாரணை செய்யுமாறு வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் இரகசிய பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

வடபகுதி இ போ ச ஊழியரின் நடவடிக்கைகள் அரசாங்கத்துக்கு எதிரானதாக இருக்கிறதென்ற சந்தேகத்தைத் தொடர்ந்தே இரகசியப் பொலிஸ் விசாரணையை நடத்த வடபகுதி பொலிஸ் அதிபர் உத்தரவிட்டு ள்ளதாகத் தெரிகிறது.

இ போ. ச சம்பந்தமாக செய்யப்படும் புகார்கள் குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், பிரயாணிகள் பயமில்லாது எந்தப்புகார்களையும் தெரி

நடாத்தும்படி யாழ். கல்வித் திணைக்கள பஸ் பிரயாணிகள் சங்கம் இலங்கை போக்குவரத்து சபைத்தலைவரைக் கோரியுள்ளது.

## நோட்டுகளுக்கு தீயிட்டவர் கைது

கொழும்பு, ஞாயிறு

பழைய 100, 50 ரூபா நாணயத் தாள்களை தீயிலிட்டுக் கொழுத்தியதாகச் சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு பொறளையில் இச்சம்பவம் நடைபெற்றது.

மன்னர் தேர்தல் ஆட்சேப வழக்கு

# திரும்பவும் வாக்குகளை எண்ணுவது பற்றி வாதம்

யாழ்ப்பாணம், திங்கள்

மன்னர் தேர்தல் ஆட்சேப வழக்கு நேற்றுக்காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் இஸடீன் மொகமட் தொடர்ந்து வாதாடினர்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் பதினன்காவது தினமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

மன்னர் தொகுதி வாக்குச் சீட்டுக்களை திரும்ப எண்ணும்படி கோரி, மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் இஸடீன் மொகமட் சட்டப் புத்தகங்களை ஆதாரம் காட்டி நீண்டநேரம் வாதாடினர்.

இவ் வழக்கில் கடந்ததேர்தலில் மன்னர் ஆட்கிமன்ற உறுப்பினராக,தமிழரசு கட்சியை சேர்ந்த திரு. வி. ஏ. அழககோன் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து யூ.என்.பி சார்பில், கடந்த தேர்தலில், மன்னர் தொகுதியில் போட்டியிட்ட ரஹிம் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுமீதானவிசாரணை நடைபெற்று வருகிறது.

மனுதாரான ரஹிம் சார்பில் அட்வகேட் இஸடீன் மொகமட், அட்வகேட் குரொசட்தம்பையா, அட்வகேட் சகிட் ஆகியோரின் உதவியுடன்,புறக்டர் சகிதுவின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிர் மனுதார் சார்பில், அட்வகேட் எம். திருச்செல்வம் அட்வகேட் எச்.டி. தம்பையா, அட்வகேட் எஸ். சிவானந்தன், அட்வகேட் எம். ஆலாலசுந்தரம் ஆகியோரின் உதவியுடன், புறக்டர் பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். முடிக்குறிய தரப்பில்,அட்வகேட் ஜி பி.டி. சில்வா ஆஜரானர். மனுதாரின் வழககறிஞர் இஸடீன் முகமட் நேற்று நண்பகல் வரை வாக்குச் சீட்டுக்களை திரும்ப எண்ணக் கோரி வாதாடினர். இதை தொடர்ந்து எதிர் மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் எம். திருச்செல்வம் வாதாடினர்.

நீதியரசர் விசாரணையை இன்று காலைவரை ஒத்தி வைத்தார்.

## சவாரிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

ஈழநாடு தீபாவளி விழாவில் நடந்த மாட்டு வண்டிச்சவாரிப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் வருமாறு:-

'ஏ' பிரிவு

1. விக்கி - உடுவில், 2. சுரேஷ்குமார் - திருநெல்வேலி. 3. சத்திவேல் - சங்குவேலி, 4. செந்தில்குமார் - மட்டுவில்.

'பி' பிரிவு

1. சோமசுந்தரம்-பொன்னலை, 2. ஜெயராமன் புளியங்கூடல், 3 முத்துக்குமாரு-வட்டுக்கோட்டை 4. குழந்தை - மட்டுவில். 5. செந்தில்வேல் - மட்டுவில்:

வரவு-செலவுத்திட்ட விவாதம் ஆரம்பம்

# 'கம்யூனிஸத்துக்குப் பாதை வகுக்கும் 'பட்ஜட்' இது

— ஜே ஆர்.

## 'சுதந்திரம் வந்தபின் வந்த சிறந்த பட்ஜட் இதுவே' — பீலிக்ஸ்

கொழும்பு, ஞாயிறு

'இந்த அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் இலங்கையை கம்யூனிஸப் பாதைக்கு அழைத்துச் செல்லவே வழிவகுத்திருக்கிறது'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜே. ஆர் ஜயவர்த்தன இன்று காலை ஆட்சிமன்றில் வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசும் போது குறிப்பிட்டார்,

அவர் மேலும் கூறியதாவது: அரசியல் துறையோடு சமமாக தனியார் துறை இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டாற்ருன் ஜனநாயகம் பிழைக்கும். ஆனல் இந்த வரவு செலவுத் திட்ட யோசனைகள் தனியார் துறையை குழிதோண்டிப் புதைப்பதாகவே இருக்கின்றன.

மூலதன வரியெனும் யோசனை மரணதண்டனைக்கு ஒப்பானது. அரசாங்கத்துறை மட்டும் பொருளாதார 'முக்தி'யை ஏற்படுத்த முடியாது. இதை ருசிய அனுபவம் உணர்த்துகின்றது. தனியார்துறை முற்ருகப் புறக்கணிக்கப்பட்டால் நாட்டின் வளத்தை திரட்டுவதற்கும் அபிவிருத்திக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கும் வாய்ப்பிருக்காது. இதனுல் அதிருப்திதான் அதிகரிக்கும். இதன் விளைவாக மக்களின் கிளர்ச்சியை அடக்குவதற்கு ஸ்டாலின் செய்தது போன்ற வழிகளையே பின்பற்ற நேரிடும். தன்னம்பிக்கை மூலம் முன்னேற்றம் என்ற பேச்சுமுட்டாள்தனமானது. இவற்றிற்கு குறிப்பாக மூலதனம் வெளியிலிருந்தே கிடைக்க வேண்டியது ஆவசியம்.

அரசாங்கத் தரப்பில் விவாதத்தைத் தொடக்கி வைத்து உள்ளூராட்சி உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பேசுகையில் கடந்த 25 வருடகாலத்தில் தனியார் துறையினருக்குச் சகல சலுகைகளும் அளிக்கப்பட்டும் அவர்கள் என்ன செய்தார்கள்? என்று கேட்டார் நாட்டின் அபிவிருத்திக்கு தனியார் துறையினர் எதுவும் செய்யத் தவறியதாற்ருன் அரசாங்கத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென ஐக்கிய முன்னணி தீர்மானித்தது. ஆனுலும் வரவு செலவுத் திட்ட உரையிற் குறிப்பிட்டது போல தனியார் துறையினரும் இயங்க அனுமதிக்கப்படுவர்,

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் கொண்டுவரப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இதுவே மிகச் சிறந்தது. என்று திரு பீலிக்ஸ் கூறியபோது சபையின் இருதரப்பிலிருந்தும் கரகோசம் எழுந்தது.

(சி. பி. ஏ)

அடைவு நகை ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாணவங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையில் 7-11-70-ல் நடைபெறும் என்று அறிவித்திருந்த மேற்படி ஏலவிற்பனை தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகிறேம். இதன் சரியான திகதி குறித்து மீண்டும் விளம்பரம் செய்யப்படும். முகாமையாளர், யாழப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி, ஊர்காவற்றுறைக் கிளை.

2534

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

அரைக்கும் மிசினில் (கிறைண்டர்) வேலை செய்வதற்கு முந்திய அனுபவமும் நல்லொழுக்கமுள்ள ஒருவர் தேவை. முன் வேலை செய்த ஸ்தாபனத்தின் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி, 53, K. K. S. ரோட், யாழ்ப்பாணம். 2384

### விற்பனைக்கு

கார்

நல்ல நிலையிலுள்ள ஸராண்டட் காரும் ரேப்றக்கோடரும் விற்பனைக்குண்டு. கார்விலை ரூபா3500/-க்குமேல் பழைய 100/- 50/- ரூபாக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். சிவகுரு, சேச்ரோட் சாவகச்சேரி. 2381

ஆதனம்:

பரந்தன் பூநகரி ரோட்டில் எட்டாம் கட்டையடியில் பண்படுத்தப்பட்ட முப்பது ஏக்கர் நெற்காணி. காலபோகத்தில் சராசரி விளைவு ஏக்கருக்கு ஐம்பது புசல். லான்ட் இன்வெஸ்ற்மென்ற், 6, பெரியதெரு, யாழ்ப்பாணம். 2379

யாழ்ப்பாணம் - நல்லூரில் பெரிய வளவுடன் புதிய வீடு விற்பனைக்கு அல்லது ஈட்டுக்குக் கிடைக்கும். பழைய பணம் ஏற்றுக்கொள்வோம். நேரில் வரவும். 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் 2382

டேப்ரிகாடர் புதியது மின்சாரத்திலும் பற்றறியிலும் இயங்கக்கூடியது பெரியதம்பி பரராஜசேகரம், 41/2, ஆத்திக்குளம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2383

### கல்வி

வகுப்புகள்

கலை/ விஞ்ஞான/ வர்த்தக/ ஆங்கில பாடங்களுக்குரிய மீட்டல் வகுப்புகள் காலையும் மாலையும் நடைபெறுகின்றன. விபரங்களுக்கு செல்வி த. தம்பிஐயா B.Sc அதிபர், கணக்கியல்கல்லூரி, சிவன்கோவில் சந்தி, யாழ்ப்பாணம் 2380

## கேள்வி விளம்பரம்

நெல்லியடிப் பட்டின சபை அலுவலகத்திற்கு மின் விநியோகம் கொடுப்பதற்கு (வயறிங் வேலை செய்வதற்கு) 1970-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி மு. ப. 10-00 மணி வரை 'சீல்' வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரக் கிரயமாக ரூபா 10/-ம், கேள்விப் பத்திரப் பிணைப் பணமாக ரூபா 50/-ம் இக்காரியாலயத்தில் செலுத்தி, 1970-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15ஆந் திகதி பி. ப. 3-00 மணி வரை கேள்விப் பத்திரங்களை இக்கரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்களை இக்காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ச. வ. தேவசகாயம்,
தலைவர்,
நெல்லியடிப் பட்டினசபை.
நெல்லியடிப் பட்டினசபை
அலுவலகம்,
கரவெட்டி.
31-10-70. 2532

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை,

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-35 பெண்ணுலகம், 7-00 திரைகானம், 7-15 சித்திரம், 7-45 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.

உதைபந்தாட்டம்

## பற்றிக்ஸ் - யாழ். கல்லூரி சுவைமிக்க போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் சென். பற்றிஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில், சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாடடப் போட்டியில், முதல் பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது.

இந்தப்போட்டியில் இரு கல்லூரிகளும் மிகக்கடுமையாக மோதியபோதிலும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக் கோஷ்டி இடைவேளைக்கு முன்பாகவே இருகோல்களைப் போட்டுவிட்டது.

இடைவேளையின்பின் ஆட்டம் தொடங்கியதும் யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு கோலைப்போட்டது. இதன் பின் சென். பற்றிஸ் அடுத்தடுத்து இருகோல்களைப் போட்டதுடன் ஒரு ''பெனல்டி'' உதையையும் நழுவவிட்டது.

ஆட்டமுடிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 4—1 கோல்களால் வெற்றிபெற்றது இப்போட்டிக்கு திரு. கணேசலிங்கம் மத்தியஸ்தராகக்கடமையாற்றினர்

### வட்டுக்கோட்டை வெற்றி

மேற்படி இருகல்லூரிகளின் 'பி' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டியில், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 2—1 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு திரு. ஈ. கனகலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

(தே நி)

## 'மனோவளர்ச்சிக்கு மல்யுத்தம் அவசியம்'

அம்பன், ஞாயிறு

'உடல் உறுதிக்கும் மனோவளர்ச்சிக்கும் மல்யுத்தம் பயின்றிருக்க வேண்டியது அத்தியாவசியமாகும். உடலை எவ்வளவுக்கு உறுதியாக வைத்துக்கொள்கின்ருேமோ அவ்வளவுக்கு உள்ளமும் உறுதியாகவிருக்கும். மல்யுத்தம் கற்கபழகிக் கொள்ளும்போது படிப்படியாக கற்றுக் கொள்ளுதல் மல்யுத்த பயிற்சி முறையின் முக்கியாம்சமாகும். மேல் நாட்டவர் மல்யுத்தத்திற்கு நன்மதிப்புக்கொடுப்பது மல்லாமல் விருப்புடன் பயின்று வருகின்றனர். நம் நாட்டவர் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளாத போதிலும் நாளடைவில் மல்யுத்தம் கற்றிருத்தலின் அவசியத்தை உணர்ந்து பயில்வதற்குமுன் வருவார்களென நம்புகின்றேன்'

பருத்தித்துறை பஸ்நிலைய முன்றலில் அமைந்த 'வீரவாகு கட்டிடத்தில் நடைபெற்ற மல்யுத்தப்போட்டிகளுக்கும்மல்யுத்த போதனைகளுக்கும் தலைமைதாங்கிய அகில இலங்கை மல்யுத்தப் போதனையாளர் திரு. டி. டி. என். பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமராட்சி வடக்குக் காரியாதிகாரி பிரிவைச்சேர்ந்த 9 விளையாட்டுக் கழகங்களிலிருந்து 30 மல்யுத்த வீரர்கள் போட்டியில் கலந்துகொண்டனர். முதல் மான போட்டி நடைபெற்றது. போஷகாக வடமராட்சி வடக்குக்கிழக்குகாரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்து கலந்துகொண்டார். மல்யுத்தப் போட்டிகளுக்கான ஒழுங்குகளை வடமராட்சிப்பகுதி விளையாட்டு போதனாசிரியர் திரு. சு கதிர்காமத்தம்பி ஒழுங்குசெய்திருந்தார்.

......

### பண்டத்தரிப்பு வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி கோஷ்டிக்கும் சினேகிதபூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி கோஷ்டியினர் ஒரு கோல் போட்டு வெற்றிபெற்றனர். விக்ரோறியாக் கல்லூரி கோல் எதுவும்போடவில்லை. போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

0 0 0

யாழ்ப்பாணம், திங்கள்

...லாலை விளையாட்டுக் கழகத்துக்கும், பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழகத்துக்கும் ... சிநேகபூர்வமான உதை பந்தாட்டப் போட்டியில்

## 'சோஷலிசஅமைப்பில்தான் உண்மையான சமஷ்டி ஏற்படும்'

மாவிட்டபுரம், ஞாயிறு

''முதலாளித்துவ அமைப்பின் கீழ் சமஷ்டி ஆட்சி பெறும் நாடுகளில் இன்று வரை எப்பிரச்சனைகளுமே முற்ருகத் தீர்க்கப்படவில்லை ஆனல் சோஷலிச அமைப்பின் கீழ் சமஷ்டி அமைப்புப் பெற்றதனுல்தான்சோவியத் நாட்டு மக்கள் நில,மொழி வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற முக்கிய பிரச்னைகளை முற்ருக தீர்த்துள்ளார்கள்,''

இவ்வாறு கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கப் பிரமுகர் திரு. கே. தவஞானம் உரும்பராய் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினுர்.

அவர்மேலும் கூறியதாவது:-

தமிழரசுக் கட்சியினர் சமஷ்டி அமைப்பின் கீழ் சோஷலிசம்தான்! தமது கொள்கை என்கிருர்கள் ஆனல் சமஷ்டி அமைப்பின் கீழ் முழுவடிவிலான சோஷலிஸ அமைப்பைபெறமுடியாதெனபது அவர்கள் அறியாத தொன்றல்லஇருந்தும் தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றுவதற்காக சோஷலிசம் என்ற வேடத்தைப் போட ஆரம்பித்துள்ளனர்.

ஆனல் சோஷலிச அமைப்பின் கீழ்தான் நாம்முழுவடிவிலான பிரச்னைகள் முற்ருக தீர்க்கப்படக் கூடியசமஷ்டி அமைப்பைப் பெறமுடியும்

'குறிப்பாக 80க்கு மேற்பட்ட மொழியைபேசுகின்ற மக்களும் 131 தேசிய இனங்களும் வாழுகின்ற சோவியத் நாட்டில் மொழிப் பிரச்னையே இனப்பிரச்னையோ கிடையாது. வறுமைமுற்ருக ஒழிக்கப்பட்டு விட்டது இதன் பயனுகத் தான்இன்று உலகில் 14 நாடுகள் முதலாளித்துவ அமைப்பிலிருந்து தம்மைமவிடுவித்துக்கொண்டு சோஷலிச அமைப்பை ஏற்றுள்ளன.

பஸ் தேசியமயமாக்கியதை எதிர்த்தவர்களும் உழுபவனுக்கேநிலம்சொந்தமாக்கப்பட வேண்டும்என்ற நல்ல கோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட நெற்காணிமசோதாவை எதிர்த்தவர்களும் இன்று சோசலிசம் பேச முற்பட்டிருப்பது விந்தையிலும் விந்தையாகவிருக்கிறது ஆகையால் தமிழ் தலைவர்கள் காட்டும் தவருன பதையில் மீண்டும் தமிழ் மக்ககளைப் போகவிடாதுஉண்மையானசோஷலிச மென்ருல் என்னவென்பதை எடுத்துக்கூறிமக்களை எமதணியில் திரட்டிஅவர்களுக்கு இழந்த உரிமைகளையும் மற்றும் சகல பிரச்னைகளையும் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு வாலிபர்களாகிய எமது கையில் தான் இருக்கிறது'' என்ருர்.

---

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 16-ந் திகதி

(2-11-70)

### ஓய்வு பெறுகிருர்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த தி. வேலுப்பிள்ளை என்பவர் தமது 17 வருட சேவையின்பின் அரசாங்க உத்தியோகத்திலிருந்து இளைப்பாறுகிருர்.

சமூக சேவையாளரான இவர் முன்னுள் வட இலங்கை பஸ் பிரயாணிகள் சங்க சம்மேளனக் காரியதரிசியாகவும் தற்பொழுது வல்வை அ. மி. பாடசாலை பெற்ருர் ஆசிரிய சங்கக் காரியதரிசியாகவும் கடமையாற்றி வருகிருர்.

......

### தலைமன்னர் கப்பல் சேவை மீண்டும் ஜனவரி 4-ல்

கோட்டை, ஞாயிறு

தலைமன்னர் - ராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து சேவை மீண்டும் 4-ம் திகதியே ஆரம்பமாகுமென அறிவிக்கப்படுகிறது இச் சேவை நேற்று முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

— —

### கிறிஸ்துராசா திருநாள்

யாழ்ப்பாணம், திங்கள்

கொய்யாத் தொட்டம் கிறிஸ்து இராசா புதுவீதியிலுள்ள தேவாலயத்தில் கிறிஸ்து இராசா திருநாள் கொண்டாடப்பட்டது. இறுதி நாட்காலை உதவி ஆயரின் பாடற் பூசையும் மாலை சுற்றுப் பிரகாரமும் சற்பிரசாத ஆராதனையும் நடந்தேறின இரவு 'சஞ்சுவான்' கருங்குயில் குன்றத்துக்கொலை ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன

... ...

### றேடியோக்களை விற்கமுயன்ற சீனக்காரர்

## ஓய்வு பெறும் அதிபர்

சிறந்த கல்விமானும், சீர்திருத்தவாதியும், ஏழை மாணவர்களின் பிதாவுமாகிய இளைப்பாறும் பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தின் முதல் அதிபர் திரு. சின்னப்பு கந்தசாமியின் ஆசிரிய காலச் சேவை மகத்தானது. அன்னரின் அளப்பரிய சேவையை அங்கம் அங்கமாக ஆராயின் அது அளவுகடக்கும்.

ஒப்புயர்வற்ற தனிப்பெரும் சேவை செய்து மாணவர்களினதும், விரிவுரையாளர்களினதும் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர்! வேற்றுமையுள் ஒற்றுமைகாணும் மேதையாக அவர் மாணவர் மத்தியில் மாணவர் மன்றக் கூட்டத்திற்கு சமூகமளித்தமை என்றுமே நினைக்க நினைக்க வியப்பினை ஊட்டுகின்றது, எப்பொழுதும் திறமைக்குமதிப்பளித்து செயலாற்றி வெற்றிகண்டவர் அதிபர் என்று கூறினுல் அது மிகையாகாது. கருத்து வேறுபாடுகளை முளையிலேயே களைந்து பகையையும் நட்பாக்கும் பண்பிற் சிறந்து கடமைபுரிந்துவெற்றிகண்ட அதிபர் அவர்களின் கற்பிக்கும் திறனை பற்றி ஒரு சிறிதாயினும் கூறத்தான்வேண்டும். அதிபர் கற்பிக்கும் சமூகக்கல்வி, என்ருல் அதுவே எல்லாப் பாடங்களிலும் மேலாக இருக்கும். வகுப்பினுள் நுளையும்போதே மலர்ந்தமுகத்துடன் தோற்றுவார். நகைச்சுவைததும்பும் கதைகளை அள்ளி அள்ளி வீசுவார்! நாடகமேடையாகவும் மாறிவிடும். மாணவராகிய நாம் வைத்தகண் வாங்காது அவரில் லயித்துவிடுவோம் பாடம் மணிக்கணக்கில் தொடர்ந்து நடக்கும். முடிவின்றி முடியும் இத்தகைய அன்பின் அதிபர் பிறப்பிலேயேஆசிரியராக அமைந்துவிட்டார் போலும்!

தமிழ், ஆங்கிலம், கணிதம் உளநூல், சமூகக் கல்வி முதலியவற்றில் புலமை மிக்கவர். எந்தப்பாடமானுலும் சரி தித்திக்கும் தீந்தமிழில் எவருக்கும் விளங்கும் வண்ணம் எடுத்துஇயம்பும் ஆற்றல்மிக்கவர். படிப்பித்தல் முறைகளை திட்டவட்டமாக தெளிவுபடுத்தும் திறமையாளன், சுருங்கக்கூறி விளங்க வைக்கும் அனுபவசால், பருத்தித்துறையை பிறந்தகமாய்க்கொண்ட எங்கள் அதிபர் அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு, பலாலி ஆகிய இடங்களில் உள்ள ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளில் அதிபராகக்கடமையாற்றி அவற்றின் வளர்ச்சிக்கு முயற்சி செய்த மாபெரும் தலைவராவார்.

இத்தகைய சிறப்பியல்புகள் வாய்ந்த எங்கள் அதிபர் இன்று ஓய்வுபெறுதற் பொருட்டு தம் சேவையினின்றுவிலகுவது எங்கட்குப் பெரிதும் துன்பமே. ஆனல் 1934ம் ஆண்டு தொட்டே இன்றுவரையும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை உருவாக்கிய எங்கள் அதிபர் இவ்வளவு நீண்ட கால சேவைக்குப் பின்பாவது ஓய்வுபெறுதல் அவசியமே என்பதையும் நாங்கள் உணராமல்இல்லை. எனினும் கடந்தகாலங்களிற்போல அன்னுர் எங்கள்மத்தியில்சேவையில் ஈடுபட்டிராவிட்டாலும் உடல்நலத்தோடு ஓய்வாக இவ்வுலகில் பல்லாண்டு காலம் வளமாக வாழ்வு பெற்று நலமாக வாழவேண்டும் என்பதே எங்கள் பேரவா. இத்தகைய ஒரே நன்நோக்கத்துடன் அன்னுர் ஓய்வுபெறுதற் பொருட்டு எங்களைப் பிரிவதால் ஏற்படும் பிரிவுத்துன்பத்தை தாங்கிக்கொள்கிருேம்.

இத்தகைய பண்பான அதிபரைச் சந்திக்க விரும்பி அவரது காரியாலய அறைக்குச் சென்றேன். அவர் என்னை இன்முகம்காட்டி வரவேற்ருர். 'சேர் இன்றுடன் எங்கள் கழகத்தையும், எங்களையும் துன்பக் கடலில் ஆழ்த்தப் போகின்றீர்களே' என்றேன் உடனே அதிபர் 'நான் கலாசாலைக்கு வெளியில் இருந்தாலும் உங்களுக்கு வேண்டும் போது வேண்டிய அறிவுரைகளை தந்தும், என்னுல் ஆகும் உதவிகளையும் எந்நேரமும் இங்குவந்து செய்து தருவேன்'' என்று சொன்னது எங்கள் யாபேருக்கும் ஆறுதலளிக்கிறது. அன்னுருக்கு நீடிய ஆயுளையும் நிறைந்த செல்வங்களையும் அருள இறைவனைப் பிரார்த்திப்போமாக.

-ஆ. வி. துரைசிங்கம்
கனிஷ்ட பல்கலைக்கழகம்,
பலாலி.

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ—மனோரமா நடித்த
செல்லப்பெண்

விசேஷ பூசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ — மனோரமா நடித்த

# செல்லப்பெண்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர் — லட்சுமி ஜெயலலிதா — அசோகன் நடித்த

# மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்-காஞ்சனா நாகேஷ்-மஞ்சுளா நடித்த

# சாந்தி நிலையம்

## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 10-00

போயா நாட்கள் 10-30 மெற்னி

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி

அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி

வி. நாகையா — ஜி. சகுந்தலா

மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி. இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

என். பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமராட்சி வடக்குக் காரியாதிகாரி பிரிவைச்சேர்ந்த 9 விளையாட்டுக் கழகங்களிலிருந்து 30 மல்யுத்த வீரர்கள் போட்டியில் கலந்துகொண்டனர். முதல் நாள் நடைபெற்ற விஷேட மல்யுத்தப் போட்டியில் இலங்கைவங்கிமனேஜர் கே. நடராசாவுக்கும் பிரபல வழக்கறிஞர் திரு. எம். பஞ்சலிங்கத்திற்கு அபாரமான போட்டி நடைபெற்றது. இரண்டாவது நாள் நடைபெற்றபோட்டியில் இ.போ.ச. பொறியியலாளர் திரு. வ். குலேந்திரனுக்கும் பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி சமரசேகராவுக்கும் அபார

## கோடரியைத் திருடினாராம்

யாழ்ப்பாணம், திங்கள்

கொக்குவில் கிழக்கிலுள்ள ஒய்வு பெற்ற பொலிஸ்உத்தியோகஸ்தரின் வீட்டில் திருடன் புகுந்து ஒருகோடரியைமட்டும் திருடிக் கொண்டு போய்விட்டதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுசந்தேக நபரைப் பொலிஸார் தேடுகின்றனர்,

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 2-00, 6-00, 9-30
எம். ஜி. ஆர், பானுமதி நடித்த
மலைக்கள்ளன்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம். ஜி. ஆர்-பத்மினி நடித்த
புதுமைப்பித்தன்

மனோஹரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 4 காட்சி
ஜெய்சங்கர்- கே. ஆர் விஜயா நடித்த
பெண்ணை வாழ விடுங்கள்

REGAL
Jaffna
Daily 4Shows
Clint Eastwood
Richard Burton
in
WHERE EAGLES
DARE

யாழ்ப்பாணம், திங்கள்

...லாலை விளையாட்டுக் கழகத்துக்கும், பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழகத்துக்குமிடையில்நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்புக் கழகம் வெற்றியீட்டியது.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் பல ரசிகர்கள் மத்தியில் நடைபெற்ற இப்போட்டி ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக இருந்தது. ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை மிக விறுவிறுப்பாகக் காணப்பட்டது.

......

## சமமுடிவு

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ்ப்பாணம் றெக்கிளமேஷன் சனசமூக நிலைய உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டி வெற்றி தோல்வியின்றி (3-3) முடிவடைந்தது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்குதிரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர், (தே. நி.)

யாழ்ப்பாணம், திங்கள்

நாளையதினம்நயினாதீவுக்கு நடமாடும் மக்கள் வங்கி அனுப்பப்படவிருக்கிறது அங்கு பழைய 50 100ரூபா நோட்டுக்களை சுலபமாக மாற்றுவதற்கு இவ்விதநடவடிக்கையை யாழ்அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா மேற்கொண்டுள்ளார்.

## இந்து வாலிபர் சங்க நிர்வாகிகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

தென்கருணையம்பதி இந்து வாலிபர் சங்கப் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. சி குணராசா, உபதலைவர் திரு. சி. மு தயானந்தன், செயலாளர்: திரு க சற்குணம், உபசெயலாளர்: திரு மு அச்சுதானந்தன், பொருளாளர்: திரு ம இளங்கோ, உபபொருளாளர்: திரு செ சிதம்பரநாதன், பிரசாரச் செயலாளர்: திரு வே சண்முகநாதன், பஜனைச்செயலாளர்: திரு திலவீரசிங்கம், மலராசிரியர்: கவிஞர் கருணை யோகன் (செ யோகராசா).

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 16-ந் திகதி

(2-11-70)

மேஷம்- நீண்ட பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம். பொருள் கைவிட்டுப்போவதற்கு இடமுண்டு. அமைதி நன்று.

ரிஷபம்- ஒளிக்கதிர்கள் உங்கள் வாழ்க்கையில் பரவும். உல்லாசமாக பொழுதுபோக்க விரும்புவீர்கள். குழந்தைகளினால் மகிழ்ச்சி உண்டு.

மிதுனம்- கடன் தொல்லை கவலையைத் தரும் உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும். நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம்.

கடகம்- கை கொடுத்து உதவுவதற்கு தந்தை முன்வருவார். காரியசித்தியும் கிட்டும். நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும் நண்பர்கள் ஆவர்.

சிம்மம்- பொறியியலாளருக்குப் பொன்னான தினம். புகழும் பொருளும் குவிவதற்கான சந்தர்ப்பம் உண்டு.

கன்னி- உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. தாய்வழிப் பொருள் வரவுக்கும் இடமுண்டு.

துலாம்- நிதியில் முடக்கம் ஏற்படும். சிலர் வீண் பழிக்கும் இலக்காவார்கள். விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவை எடுக்கும்.

விருட்சிகம்- கவலையின் தாக்குதலால் வேதனைப் படுவீர்கள், உடல்நலமும் சிறிது பாதிக்கப்படலாம். பொறுமைவிரும்பத்தக்கது.

தனுசு- இலட்சியவாதிகளுக்கு சிறப்பான தினம். உரிமைகளைப் பெறுவதில் புதிய பாதை தென்படும்.

மகரம்- எதிலும் அவசரக் கோலம் தென்படும் துரிதகதியில் செயலாற்றமுனைந்து தோல்வியை முத்தமிடலாம்,

கும்பம்- வார்த்தைஜாலம் செய்வதில் வல்லவராவீர். இனிக்கப்பேசி எதையும் சாதித்துவிடுவீர்கள். பணவரவும் சரளமாக இருக்கும்.

மீனம்- போதுமென்ற மனத்துடன் புறப்படுவீகள் பிறருக்கு உழைப்பதில் உவகை ஏற்படமுடியும் சிலர் வேதாந்தப் போக்கையும் விரும்பக்கூடும்.

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

துக்கொலை ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன

... ...

## றேடியோக்களை விற்கமுயன்ற சீனக்காரர்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு துறைமுகத்தில் வைத்து வெளிநாட்டு றேடியோக்களையும்ரேப்றேகோட்களையும் விற்கமுயன்ற 3 சீனக்காரர்கள் பொலிசாரிடம் சிக்கினர்.

ரூபா பத்தாயிரம் பெறுமதியான 7 ட்ரான்சிஸ்டர் றேடியோக்கள், ரேப்றெக்கோட்கள் அவர்களிடம் காணப்பட்டன.

(சி பி ஏ

... ...

## சூரன்போர்

அம்பன், ஞாயிறு

தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோவிலும், மாசனை பத்திரகாளி அம்மன்கோவிலும், பருத்தித்துறை சிவன் கோவிலும், நாகர்கோவில் வடக்கு முத்துமாரியம்மன் கோவிலும் இம்மாதம் 4ம் திகதி சூரன்போர் கொண்டாடப்பட விருக்கிறது.

# விசேஷ பூசை

ஒருமாத நிறைவுதினம்

பிறப்பு 25-12-1910

இறப்பு 30-9-1970

ஒருமாத நிறைவு 3-11-1970

இடம் புனித யுவானியார் கோவில்.

நேரம் காலை 5-45



திருமதி சந்தியாப்பிள்ளை

மனுவேற்பிள்ளை சந்தியாப்பிள்ளையின் மனைவியும் ஒய்வுபெற்ற பெரியதபாற் கந்தோர் அதிகாரி சந்தியாப்பிள்ளை மனுவேற்பிள்ளை தர்மலிங்கம் பொன்மணி, தனபாலசிங்கம் மேளின், இரஞ்சிதம், பீலிக்ஸ் மரியதாஸ், ஜெனோவா ஆகியோரின் தாயாரும் கஸ்தூரியார் வீதி, றேடியோ எலெக்றிக்கல்ஸ் ச. தர்மலிங்கம், நாவலர்வீதி குமரர் மோட்டோர் வேர்க்ஸ் உரிமையாளர் பொன்னுத்துரை தனபாலசிங்கம் ஆகியோரின் மாமியாருமான திருமதி சந்தியாப்பிள்ளை மறைந்த ஒரு மாத நினைவுதின விசேஷ பூசை நாளைக் காலை 5-45க்கு ஆஸ்பத்திரிவீதி புனித யுவானியார் கோவிலில் நடைபெறும். 2533


# "செவன"



கூரை ஓடுகள்



- "செவன" ஓடுகள் (இரண்டாம் தரத்திலுள்ளவைகள்) இப்போ சுன்னாகம் மரத்தளபாடத் தொழிற்சாலையில் பெற்றுக் கொள்ளலாம்.
- இவ் ஓடுகளை மிகவும் சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். 1,000 ஓடுகளின் விலை ரூபா 375/-மாத்திரமே.
- செலவைக் குறைப்பதற்காக கட்டிடவேலை செய்பவர்கள் பெரும்பாலும் இவ் ஓடுகளையே உபயோகிக்கின்றனர்.

விசாரணைகள்:-

முகாமையாளர்

தேசிய சிறுகைத்தொழிற் கூட்டுத்தாபனம்

(மரத்தளபாடத் தொழிற்சாலை)

சுன்னாகம்.

தேசிய சிறுகைத்தொழிற் கூட்டுத்தாபனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக்கு அருகில் இரு ரயில்கள் மோதின 16 பேர் பலி; 98 பேர் காயம்

## குழந்தையைக் காளிக்குப் பலிகொடுத்தார் தந்தை

புதுடில்லி, நவம்பர் 1

மூன்று வருடங்களுக்கு முன் தனது 5வயதுக்குழந்தையை காளிக்குப்பலி கொடுத்ததாகக் கூறப்படும் ராம் சரண் என்பவரையும் அவரது தந்தையையும் பொலிசார் கைதுசெய்துள்ளனர்

அக்குழந்தையின் தாயார் திருமதி விமலாதேவி (27வயது) உத்தரப்பிரதேசத்திலுள்ள சஹரன்பூர் ஜில்லவில் உள்ளகாங்கு கிராமத்திலிருக்கும் காளி கோயிலில் தமது 5 வயதுக் குழந்தையை மூன்று வருடங்களுக்குமுன் தமது கணவர் பலி கொடுத்ததாக பொலிசாருக்கும் பத்திரிகைகளிலும் புகார் தெரிவித்துள்ளார்.

தமது குழந்தையை தம்கணவர் காளிக்குப் பலி கொடுத்து குழந்தையின் இரத்தத்தைஒரு புட்டியில் எடுத்து காளிக்கு காணிக்கை செலுத்தியதாக விமலாதேவி தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

## காஷ்மீர் இந்தியாவின் பகுதி என்பதில் ஐயமில்லை

### இஸ்ரேல் கான்ஸல் கூறுகிறார்

சண்டிகார், நவ 1

ஐ.நா. சபையில் சில ஆண்டுகளுக்கு முன் காஷ்மீர் பிரச்னை எடுக்கப்பட்டபோது இஸ்ரேல் அரசாங்கம் இந்தியாவையே ஆதரித்தது என்றும், காஷ்மீர், இந்தியாவின் பகுதி என்பதில் இஸ்ரேலுக்கு எவ்வித ஐயமுமில்லை என்றும் இஸ்ரேல் கான்ஸல் திரு. யாகோவ் சண்டிகாரில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்

1965ம் ஆண்டு இந்தியாயாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்ட யுத்தத்தில் இஸ்ரேல் அரசாங்கம் கனரக குறு பீரங்கிகளை இந்தியாவுக்கு அளித்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவும், இஸ்ரேலும் விஞ்ஞான அறிவையும், தொழிலாற்றல் நிபுணர்களையும் பரிமாறிக்கொள்வதோடு, ராஜஸ்தான் பாலை நிலங்களைச் சோலையாக்குவதற்கு இஸ்ரேல் விஞ்ஞானிகள் இந்தியருடன் தொழில் அறிவையும் பகிர்ந்துகொள்ளலாம் என்றார்

**ரூ. 2,000 அபராதம்:**

## கருணாநிதியை அவதூறு செய்ததாக வழக்கு

### அப்பீலுக்கு அனுமதி மறுப்பு

புதுடில்லி, நவ. 1

'நாத்திகம்' பத்திரிகையின் ஆசிரியர் பி. ராமசாமிக்கு அவதூறு வழக்கில் சென்னை ஹைகோர்ட் தண்டனை விதித்தது. அதை எதிர்த்து அப்பீல் செய்ய விசேஷ அனுமதிகோரும் அவர் மனுவைச் சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்தது.

[illegible] யற்ற கடவுகை முதன் மந்திரி திரு. கருணாநிதி பயன்படுத்தியதாக தன் பத்திரிகையில் 1966 ஜூன் 24-ம் திகதி ஆசிரியர் ஒரு புகாரை வெளியிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

வழக்கை விசாரித்த எழும்பூர் மாகாண மாஜிஸ்திரேட் ராமசாமி அவதூறு செய்த [illegible]

சென்னை, நவம் 1

சென்னைக்கு அருகே நடந்த ரயில் விபத்தில் 16 பேர் மரணமானார்கள். 98 பேர் காயம் அடைந்தனர். பெரம்பூர் புகையிரத நிலையத்தை விட்டு ரயில் புறப்படுவதற்கு சிறிது நேரத்திற்கு முன் இவ்விபத்து நடந்தது.

நேற்றுமாலை மங்களூர் ரயிலும் கொச்சி ரயிலும் எதிர்பாராத விதமாக மோதியதில், 16 பேர் ஸ்தலத்தில் மரணமடைந்தனர். 98 பேருக்குமேல் காயமடைந்தனர். இவர்களுள் சிலரின் உயிர் ஆபத்தான நிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரம்பூர் புகையிரத நிலையத்தைவிட்டு மங்களூர்ரயில் புறப்படுவதற்கு அரைமணி நேரத்தில், எதிர்பாராதநிலையில் கொச்சி ரயிலுடன் மங்களூர் ரயில்பின் புறத்திலிருந்து வந்து இரு ரயில்களும் மோதிக்கொண்டன. இதனால் ரயில் தண்டவாளத்தைவிட்டுவிலகியதோடு ரயில் பெட்டிகள் கவிழ்ந்தன இதனால் ரயில் பெட்டிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. இந்த ரயில் விபத்து நடந்த இடத்திற்கு புகையிரத உதவிக் கமிஷனர் விரைந்துள்ளார்.

தடம்புரண்ட கொச்சி ரயில் பெட்டிகளுக்குள் மேலும் பலர் சிக்கி இருக்கலாம் எனத் தெரியவருகிறது

வைத்திய உதவி அளிப்பதற்காக உயர்தர வைத்திய அதிகாரிகளைக் கொண்ட உயர் குழுவொன்று ஸ்தலத்திற்கு விரைந்துள்ளது.

காயமடைந்த 98 பேரில் 51 பேர் பெரம்பூர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றவர்கள் சென்னை அரசாங்க பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் தலைமையிலுள்ள உயர் அதிகாரிகள் கொண்ட குழு பந்தோபஸ்து ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இவ்விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கும், காயமடைந்தோருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதிதனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளார். உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கும், பாதிக்கப்பட்டோருக்கும் தமிழ்நாடு அரசாங்கம் உதவி அளிக்குமென அமைச்சர் மாதவன் தெரிவித்தார்.

## திரைப்பட குழு

சென்னை, நவ. 1

திரைப்படத் தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள் தொழில் நுட்ப நிபுணர்கள் ஆகியோருக்கான 9 அம்ச நடத்தை ஒழுங்கு முறைகளைத் தாமாகவே நடைமுறைப்படுத்துவதற்காக தென்னிந்திய சினிமா வர்த்தக சங்கம் ஒருகுழுவை நியமித்துள்ளது. இக்குழுவில் திருவாளர்கள் ஏ எல் சீனிவாசன், ஏ வி மெய்யப்பன், நாகிரெட்டி, பி ஆர் பந்துலு ஸ்ரீதர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## ஐ.நா திட்டத்திற்கு அமெரிக்காவின் கூடிய நிதி உதவி

நியுயோர்க், நவ. 1

ஐ. நா. சபையின் 1971-ம் [illegible]

## உலகப் போட்டியில் இலங்கையர்

லண்டன், நவம். 1

உலகப் பிரபல்யம்பெற்ற இலங்கையின் பிலியாட்ஸ் (மேசைக்கோல் பந்தாட்டம்) சாம்பியனுக முகமது லாந்ர் தற்சமயம் ஸ்கொட்லாப்தின் தலைநரான எடின்பேர்க்கிற்கு விஜயம் செய்திருக்கிறார். இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் 1970 உலகஸ்னுக்கர் (மேடைக்கோல் பந்தாட்டம்) சாம்பியன் போட்டியில் அவர் கலந்துகொள்வார் உலக சாம்பியன் போட்டிகளில் இவர் கலந்துகொள்வது இது நான்காவது தடவையாகும். 1956ம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய சாம்பியன் போட்டியில் இவர் முதல் இட[illegible]தப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

எடின்பேர்க்கில் கடந்த 6 தினங்களாக நடைபெறும் போட்டியில் தான் விளையாடிய இரு ஆட்டங்களிலும் இவர் வெற்றிபெற்றுள்ளார் [illegible] வொரு விரரும் [illegible]

## அயர்லாந்தில் மீண்டும் குழப்பம்

பெல்ப்பாஸ்ட், நவ, 1

வட அயர்லாந்தில் சிலர் ஊர்வலம் சென்றதைத் அடுத்து அங்கு குழப்பநிலை தோன்றியது. நகர்கள் மத்தியில் இவ்வூர்வலம் சென்றபொழுதுபொலிசார் தடுத்து நிறுத்தினர். இதனை எதிர்த்து ஊர்வலத்தினர் மேலும் செல்ல முயன்றபொழுது, அவ்வூர்வலத்தைக் கலைப்பதற்குப் பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனை அடுத்து சிலபகுதிகளில் பதட்டநிலைகாணப்படுகிறது.

## விபூதி ஏன்?

### அமெரிக்க இளைஞர் சந்தேகம் தீர்ந்தது

கிளிநொச்சி, ஞாயிறு

நேற்றுக் காலை துணுக்காய் விவசாயப் பிரிவில் இளம் விவசாயிகள், உழவர்கள் ஆகியோரின் நாளாந்த வாழ்க்கை முறையை அமெரிக்க இளைஞரான திரு நோமன் சாள்ஸ் சுவற் மிகவும் உன்னிப்பாகக் கவனித்தார்.

இப்பகுதி விவசாயிகள் அதிகாலையில் எழுந்து சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்வது அவருக்கு ஆச்சரியமளித்தது. அதிகமான கமக்காரர்களின் நெற்றிகளில் காணப்பட்ட விபூதியைக் கண்டு காரணம் கேட்டார் நோமன். விவசாய அதிகாரி திரு. ஸ்ரீஸ்கந்தராசா மூலம் இதற்கான விளக்கத்தைக் கேட்டு அறிந்துகொண்டார்

விவசாயிகளுடன் மதிய போசனம் உட்கொண்ட இவர் தனக்கு மோரும், தயிரும் தெவிட்டவில்லை எனக் கூறினார்.

## பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

ஒட்டுசுட்டான் அ. த. க. பாடசாலை தலைமையாசிரியராக 12 வருட காலம் கடமைபுரிந்து மாற்றலாகிச் சென்ற திரு. க.பெ. மயில்வாகனம் ஆசிரியருக்கு பொதுமக்களும் பாடசாலை ஆசிரியர்களும் சேர்ந்து சேவைநலம் பாராட்டுவிழா கொண்டாடினர். அவ்விழாவில் தற்போதைய தலைமை ஆசிரியர் திரு. க. சத்தியானந்தசிவம் பாராட்டிப்பேசுகையில், 'ஆசிரியர்கள் எ[illegible]

தென் வியட்நாம் வெள்ளப்பெருக்கில்

# 150 பேர் உயிர் இழந்தனர்;

## ஆயிரக் கணக்கானோர் வீடிழந்து தவிப்பு

சைகோன், நவ. 1

**தென் வியட்நாமின் வடபகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் 150 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளை இழந்து பரிதவிக்கின்றனர், சில கிராமங்கள் முற்றாக நாசமாயின.**

சில நாட்களாகத் தென் வியட்நாமில் பெருமழை பெய்ததினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட் பலகிராமங்கள் நீரில் மூழ்கின. இதனால் 150 பேருக்கு மேற்பட்டவர்கள். உயிரிழந்துள்ளனர். ஆயிரக் கணக்கானோர் தங்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

பெரும்பாலான யுத்த அகதிகள் வாழும் பகுதியான குவாங்ரை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியிலுள்ள ஐந்து மாகாணங்களில் பெரும் பகுதி நெற்பயிர்கள் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. தென் வியட்னும் துருப்புக்கள் போர்நிறுத்தம் செய்து அகதிகளுக்கு உணவுப் பார்சல்களைக் கொடுத்து உதவிவருகின்றன.

இந்த வெள்ளப்பெருக்கினால் வட வியட்னும் எல்லைப் பகுதிகளும் சேதத்துக்குள்ளாகியிருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால் அங்கு ஏற்பட்ட சேத விபரம் இதுவரை தெரியவில்லை,

இவ்வெள்ளப்பெருக்கினால் தென் வியட்னுமிய மக்கள் தங்கள் உடைமைகளையும் உயிர்களையும் இழந்து தவிக்கையில் நிலநடுக்கம் வேறு அவர்களைப் பயமுறுத்தியது. இந்நிலநடுக்கத்தினால் பல வீடுகள் இடிந்து வீழ்ந்தன,

## கல்விப் பகுதி பொதுப்பரீட்சைகள்

பருத்தித்துறை, ஞாயிறு

11-ம்தர விஞ்ஞான வகுப்புகளுக்காகக் கல்விப்பகுதி நடாத்தும் பொதுப் பரீட்சை இம்மாதம் 23-ம் திகதி தொடக்கம் 26-ம் திகதிவரை நடைபெறவிருக்கிறது. விஞ்ஞானம், பௌதிகம். தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் பரீட்சை நடாத்தப்படும்.

8-ம் தரத்திற்கான பரீட்சை டிசம்பர் மாதம் 8-ம் திகதி சகல பாடசாலைகளிலும் நடைபெறும். இப்பரீட்சையில் தமிழ், பொது விஞ்ஞானம். ஆங்கிலம், எண், சமூககலைகள் ஆகிய பாடங்கள் பரீட்சிக்கப்படும்

அடுத்தாண்டு 8-ம் வகுப்புகள் இல்லாத பாடசாலைகளில்இம்மாணவர்ஒரளவுதிறமையுடன் பரீட்சை எழுதினாலும் அடுத்த வகுப்புக்கு ஏற்றப்படுவார்களெனத் தெரிகிறது.

மன்னர்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

முசலி, ஞாயிறு

மன்னார் மாவட்டத்துக்கு புதிய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக திரு. அன்ரன் அல்பிறற் பதவி ஏற்றுள்ளார். இவர் இதற்கு முன் காரியாதிகாரியாக கடமையாற்றியுள்ளார்.

இவருக்குமுன் மன்னர் மாவட்டத்துக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றிய திரு. என். நல்லைநாதன் வவனியா மாவட்டத்துக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றுவார்.

## விற்பனவுஇலாகாபற்றி உடுப்பிட்டி எம்.பி.


பருத்தித்துறை, ஞாயிறு

நெல்லியடிப் பகுதியில் ஒரு விற்பனவு இலாகா நிறுவுவதன் அவசியம் பற்றித் தாம் கச்சேரியில் நடந்த இணைப்புக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்திப் பேசியதாகவும் தற்போதைய நிலையில் புதிய விற்பனவு இலாகா திறக்க முடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதாகவும், கூடிய விரைவில் தாம் முயன்று அதைப் பெற்றுக் [illegible]

## குன்றக்குடிக்கு அழைப்பு

சுழிபுரம், ஞாயிறு

வரும் ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படவிருக்கும் சாகித்தியவிழாவில் கலந்துகொள்ளுமாறு தமிழக மேல்சபை உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள் [illegible]



## வெளிநாடு சென்றார்

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டி கம்பர்மலையைச் சேர்ந்த திரு. மூத்ததம்பி துளசிதாஸ் உயர் கல்வி பயில்வதற்காக சிங்கப்பூர் சென்றுள்ளார். அரசாங்க உபகாரச் சம்பளம் பெற்றுச் சென்றுள்ள இவர் ஒருவருடகாலம் பயில்வார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிபழையமாணவர் இவர்.

## டிஸ்பென்சர்கள் கூடி ஆராய்வர்

சுழிபுரம், ஞாயிறு

அரசாங்க டிஸ்பென்சர்கள் சங்க யாழ். கிளையின் விசேட பொதுக் கூட்டம் இம்மாதம் 6ம் திகதி மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் சுகாதார சேவை அதிகாரியின் காரியாலயத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிங்களத் தேர்ச்சி நிபந்தனை பற்றியும் மற்றும் பல முக்கிய பிரச்னைகள் பற்றியும் ஆராயப்படவுள்ளன. விசேட கூட்டத்துக்கான அறிவித்தல் சகல அங்கத்தவர்களுக்கும் யாழ். கிளைச் செயலாளர் எம். கந்தசாமியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## 6,000 பேருக்கு வேலை வாய்ப்பு

உடுப்பிட்டி, ஞாயிறு

"வல்லிபுரக்கோவிலில்கண்ணாடித் தொழிற்சாலையை நிறுவுவதின் மூலம் வேலையற்றிருக்கும் சுமார் 6000 [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...க்கு அவதூறு வழக்கில் சென்னை ஹைகோர்ட் தண்டனை விதித்தது. அதை எதிர்த்து அப்பீல் செய்ய விசேஷ அனுமதிகோரும் அவர் மனுவைச் சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்தது.

ஹைகோர்ட் விதித்த தண்டனை மிகக் கடுமையானது ஆனல் சட்டப் பிரச்னை இல்லாததாலும் தண்டனை விஷயத்தில் தலையிடுவது இக்கோர்ட்டின் வழக்கமாக இல்லாததாலும் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது வேறு பரிகாரம் இருந்தால் அதை மனுதார் நாடலாம் என சுப்ரீம்கோர்ட் கூறியது

தி. மு. க, திரட்டிய தேர்தல் நிதியை தன் சினிமாப் படத்தைத் தயாரிக்க வட்டி...

1966 ஜுன் 24-ம் திகதி ஆசிரியர் ஒரு புகாரை வெளியிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

வழக்கை விசாரித்த எழும்பூர் மாகாண மாஜிஸ்திரேட் ராமசாமி அவதூறு செய்ததாகக் கருதி அவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனையும் ரூபா 2000 அபராதமும் விதித்தார்.

திரு கருணாநிதி முதன் மந்திரியாகிவிட்டதாகவும், ஆகவே தன் வழக்கில் நீதி கிடைக்காது என அஞ்சுவதாகவும் கூறி தமிழ்நாட்டுக்கு வெளியிலுள்ள கோர்ட்டுக்கு வழக்கை மாற்ற சுப்ரீம் கோர்ட்டில் திரு ராமசாமி மனுச் செய்திருந்தார்.

## கிளிநொச்சியில்சம் பவம்

# ரயில்மோதிமாண்டார்!

## சட்டைப் பையில் புதிய நோட்டுகள்

கிளிநொச்சி, ஞாயிறு கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி வந்துகொண்டிருந்த உத்தரதேவி மோதியதனல் நடுத்தர வயதுடைய நபர் ஒருவர் மரணமானர் இச்சம்பவம் கிளிநொச்சிப் புகையிரத நிலையத்தில் நடைபெற்றது.

விபத்தினுல் மரணமடைந்தவரின் சட்டைப் பையில் புதிய ரூபாய் நோட்டுக்கள் இருக்கக் காணப்பட்டன. ஆனல் விபத்துக்குள்ளானவரை அடையாளம் காணமுடியவில்லை.

குறிப்பிட்ட விபத்துக் காரணமாகப் புகையிரதம் 45 நிமிடங்கள் தாமதித்தே புறப்பட்டது.

# ஆசிரியர் தெரிவுக்கும் தமிழ் எம். பி.க்களுக்குத் தொடர்பில்லை

பருத்தித்துறை. ஞாயிறு ''பட்டதாரி ஆசிரியர் தெரிவுக்கும் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து செல்லும் ஆட்சிமன்றப்பிரதிநிதிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை. இதுவரை இவ்வாசிரியர் தெரிவு விடயத்தில் குறிப்பிட்ட தொகையினரைச் சிபார்சுசெய்யும் உரிமைஎந்தவொரு தமிழ்ஆட்சிமன்ற உறுப்பினருக்கும் கொடுக்கப்படவில்லை. இவ்விடயம்பற்றி நிலவும் வதந்திகள் அர்த்தமற்றவை. சில அரசியல் சுயநலமிகள் இது பற்றித் தீர்ப்பிரசாரம் செய்வது மிகத் தவறுனது''

இவ்வாறு உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு க. ஜெயக்கொடி தெரிவித்தார். எதுஎவ்வாருயினும் எந்தவொரு பதவிக்கும் திறமையே அடிப்படையாக அமைவது விரும்பத்தக்கது என்றும் அவர் தெரிவித்தார்.

......

### கி. மு சங்க கூட்டம்

முசலி, ஞாயிறு கொக்குப்படையான்சென் ஜேம்ஸ் கிராம முன்னேற்றச் சங்க பொதுக்கூட்டம் முசலிக் காரியாதிகாரி பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. கே. சுப்பையாபிள்ளை தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் இவ்வருட நிர்வாகிகளாகத்தெரியப்பட்டனர்.

தலைவர்: தே. அவுருஸ் பிள்ளை, காரியதரிசி; பி. ஜெ செல்வரெட்டினம் (உப தபால் அதிபர்), தனதிகாரி: அ. அல்பிறேற்.

நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

### பொது மலசலகூடம்

முசலி, ஞாயிறு மாதிரி கிராம வீடமைப்புத்திட்டத்தின்கீழுள்ள மன்னூர் பட்டின சபை எல்லைக்குள்ளிருக்கும் பள்ளிமுனை என்னும் கிராமத்தில் ஒரு பொது மலசலகூடம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மன்னூர் பட்டின சபை எடுத்துள்ளது.

## ஐ.நா திட்டத்திற்கு அமெரிக்காவின் கூடிய நிதி உதவி

நியுயோரர்க், நவ. 1 ஐ. நா. சபையின் 1971-ம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டத்திற்கு அமெரிக்கா 10 கோடி டாலரை உதவும் என அமெரிக்க ஜனதிபதி நிக்சன் தெரிவித்துள்ளார்

கடந்த வருடம் 126 நாடுகளினல் மேற்படி திட்டத்திற்குக் கொடுக்கப்பட்ட 22 1/2 கோடி டாலரில் மூன்றில் ஒரு பகுதியான 8 1/2 கோடி டாலரை அமெரிக்க வழங்கியது.

இதுவே ஐ. நா, அபிவிருத்தித் திட்டத்திற்கு பல நாடுகள் அளித்த தொகையில் பெருந்தொகையாகும்.

1971-ம் ஆண்டுக்கான ஐ நா அபிவிருத்தித் திட்டத்திற்கு சுவீடன் 2 1/4 கோடி டாலரும், இங்கிலாந்து 1 1/4 கோடி டாலரும், நெதர்லாந்து 1கோடி டாலரும் அளிக்கின்றன இவையே ஐ நா அபிவிருத்தித் திட்டத்திற்கு அளிக்கப்படும் உதவிப்பணத்தில் மிகக் கூடிய தொகையாகும். இத்தொகை இவ்வாண்டு பிரிட்டன் வழங்கியதைவிட ஒரு லட்சம் பவுண் கூடுதலானதாகும்.

1971-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேலும் கூடுதலான தொகையை வழங்கவும் பிரிட்டன் சம்மதித்துள்ளது. பேருவில் நிகழ்ந்த பூகம்பம்போன்ற இயற்கை அழிவுகளைச் சமாளிக்கும் புனர்நிர்மாண வேலைகளுக்கென கூடுதலான உதவி வழங்குமாறு ஐ. நா. சபை முன்னேறிய நாடுகளுக்கு அண்மையில் வேண்டுகோள் ஒன்றை விடுத்தது. இந்தக் கோரிக்கையின்பேரிலேயே பிரிட்டன் இத்திட்டத்திற்கு மேலதிக உதவிவழங்கத் தீர்மானித்தது.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 1959ம் ஆண்டிலிருந்து இதுவரை மொத்தம் 7000பேர் பிரிட்டனில் பயிற்சியை மேற்கொண்டனர். 1969ம் ஆண்டில் மட்டும் 459 பேர் இத்திட்டத்தின் கீழ் பிரிட்டனில் பயிற்சிபெற்றனர்

1969ம் ஆண்டில் ஐ நா அபிவிருத்தித் திட்டம் 650 பெரிய அளவிலான திட்டங்களுக்கும் 2500 சிறு திட்டங்களுக்கும் உதவியளித்து வந்தது. பெரிய தேசியத் திட்டங்களின் மொத்த செலவினங்களில் 60 விகிதமான தொகையை பிரிட்டன் உட்பட முன்னேறிய நாடுகளே வழங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

...பது குறிப்பிடத்தக்கது.

எடின்பேர்க்கில் கடந்த 6 தினங்களாக நடைபெறும் போட்டியில் தான் விளையாடிய இரு ஆட்டங்களிலும் இவர் வெற்றிபெற்றுள்ளார். இவ்வொரு வீரரும் முதல் ஆறு போட்டிகளில் பங்குபற்றிய பின்னரே இறுதி சாம்பியன் போட்டியில மோதிக்கொள்வார்கள்.

— —

## நடுவானில் ஹெலிகாப்டர் வெடித்தது

பாங்கொக், நவம்.1 லாவோஸ் விமானப்படை ஹெலிகாப்டர் ஒன்று நடுவானில் விபத்துக்குள்ளாகியதில் அதில் இருந்த ஆறுபேர் உயிரிழந்தனர், கிழக்குத் தாய்லாந்தில் இவ்விபத்து நடந்ததாக அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹெலிகாப்டர் கடற்படைப் பயிற்சியின்போதே நடுவானில் இவ்விபத்து நடைபெற்றதாக மேலும் தூதரக அதிகாரி தெரிவித்தார் எவ்விதமாலும், பயங்கரவாதிகளால் ஹெலிகாப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்பதை அவ்வதிகாரி மறுக்கவில்லை.

— —

## குற்றத்தடுப்பு விஞ்ஞானத்தில் இலங்கையர்

லண்டன், நவ. 1 கொழும்பிலுள்ள அரசாங்க ரசாயனப் பரிசோதனையாளர் இலாகாவில் இரத்தவியல் நிபுணராகக் கடமையாற்றும் திரு. அசோகா விஜயசேகரா இப்பொழுது பிரிட்டனில் குற்றத்தடுப்பு சார்ந்த வைத்திய விஞ்ஞானத்தில் பயிற்சி பெற்று வருகிருர். கொழும்புத் திட்ட உபகார நிதி பெற்று கடந்த இரண்டு வருட காலமாக பிரிட்டனில் பயின்று வரும் இவர் குற்றத் தடுப்புத் துறையில் விஞ்ஞானம் பெரும் பணி ஆற்றி வருவதாகத் தெரிவித்தார். விஞ்ஞான ரீதியாக குற்றங்களைத் தடுக்கும் நுணுக்கமான பிரிட்டிஷ் முறைகள் பற்றி தாம் நன்கு பயின்றுள்ளதாகவும் அவர் கூறினுர்.

கிளாஸ்கோ நகரிலுள்ள விஞ்ஞான ஆய்வு கூடத்தில் நடைபெற்ற பயிற்சிவகுப்பிலும் கலந்துகொண்ட இவர் லண்டனிலுள்ள 'மெட்ராபலிட்டன்' பொலிஸ் குற்றத்தடுப்பு விஞ்ஞான ஆய்வு கூடத்தில் பயின்று வருகிருர்.

...ஆசிரியர்களும் சேர்ந்து சேவைநலம் பாராட்டுவிழா கொண்டாடினர். அவ்விழாவில் தற்போதைய தலைமை ஆசிரியர் திரு. க. சத்தியானந்தசிவம் பாராட்டிப்பேசுகையில், 'ஆசிரியர்கள் எதிர்கால நற்பிரசைகளை ஆக்கும் கர்த்தாக்கள். இத்தகையோர் சீராகவும் சிறப்பாகவும் சேவைசெய்ய பாடசாலையில் பல உபகரணப் பொருட்களும் இருக்கவேண்டியது மிகமிக அத்தியாவசியம். இன்று பல ஆரம்ப பாடசாலைகள் மேசையும், கதிரையும், மாணவர்களையும் கொண்டதாக வே காணப்படுகின்றன. இக்குறைகளை ஆசிரியர்களுடன் சேர்ந்து பொதுமக்களும் ஒத்துழைத்து போக்கினுல் தான் ஆசிரியர்களின் சீரான பணியினைப் பெறமுடியும். பல இன்னல்களுக்கிடையே தான் ஆசிரியர் மயில்வாகனம் சேவைசெய்துள்ளார் என்ருல் அதைநாம் பாராட்டவேண்டியவர்களாக இருக்கிறேம்' என்ருர்.

ஒட்டுசுட்டான் கி.ச.தலைவர். ஆசிரியர்கள், பிரமுகர்களும் பாராட்டுரைவழங்கினர். திரு. ஏ. கந்தையா ஆயுள்வேத வைத்தியர் நன்றியுரை கூறினுர்.

— —

## 5-ம் தரப் பரீட்சை

யாழ்ப்பாணம். திங்கள் வட இலங்கைத் தமிழாசிரிய சங்கம் நடாத்தும் 5-ம் தரப்பரீட்சையைஇம்மாதம் 20- ம்திகதி நடத்துவதெனச் சங்கப் பரீட்சை உபசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பண்டிதர் சி. கா. தம்பையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், பிரஸ்தாப பரீட்சைப் பெறுபேறுகளை டிசம்பர் 10 திகதிக்கு முன்னர் பாடசாலைகளுக்கு அனுப்புவதென்றும் பல பாடசாலைகள் இவ்வாண்டு பங்கு பற்றுவதால் கிளைச் சங்க நிர்வாகிகளும்பரீட்சை காரியதரிசிக்குஉதவவேண்டுமென்றும், ஒவ்வொரு கிளையிலுமிருந்து 15 பரீட்சகர்களைத் தெரிவு செய்வதென்றும்தீர்மானிக்கப்பட்டது.

— —

## 15 நாய்கள் கொலை!

சுழிபுரம், ஞாயிறு பண்டத்தரிப்பு வயல் வெளியில் நேற்று இரவு பதினைந்து நாய்கள் இறந்து கிடந்தன. நஞ்சு கலந்து உணவை உண்டதால் தான் நாய்கள் இறந்துள்ளன என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

...வலியுறுத்திப் பேசியதாகவும் தற்போதைய நிலையில் புதிய விற்பனவு இலாகா திறக்க முடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதாகவும், கூடிய விரைவில் தாம் முயன்று அதைப் பெற்றுக் கொடுக்க விருப்பதாகவும், உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு க.ஜெயக்கொடி தெரிவித்தார்

பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப்பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஓரளவு வாழ்க்கைச்செலவைக்கட்டுப்படுத்தலாமென்றும் சம்பந்தப்பட்ட அமைச்சருடன்தொடர்பு கொண்டு இதை உணர்த்த விருப்பதாகவும் திரு. ஜெயக்கொடி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படவிருக்கும் சாகித்தியவிழாவில் கலந்துகொள்ளுமாறு தமிழக மேல்சபை உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

......

### கந்தசஷ்டி

சுழிபுரம், ஞாயிறு சித்தன்கேணி பிள்ளையார் கோவில் முன்பாகவுள்ள கடம்பமரத்தில் எழுந்தருளியுள்ள வேலவன் ஆலயத்தில் கந்தசஷ்டி விழா தினமும் காலை வெகுவிமரிசையாக நடைபெற்றுவருகின்றது. கந்தசஷ்டி கவசம் படித்தல், பூசை, அபிஷேகம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

### வேலை வாய்ப்பு

உடுப்பிட்டி, ஞாயிறு ''வல்லிபுரக்கோவிலில்கண்ணாடித் தொழிற்சாலையை நிறுவுவதின் மூலம் வேலையற்றிருக்கும் சுமார் 6000 வாலிபர்களுக்குத் தொழில் வசதி கிடைக்கும். இத்தொழிற்சாலை அந்நிய செலாவணியைக் கட்டுப்படுத்தமுடியும்'' என்று யாழ் பிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க மகாநாட்டில் பேசுகையில் திரு தியாகராஜா குறிப்பிட்டார்.


# தற்பொழுது அச்சில்

★ ஈழநாடு தினக்குறிப்பு 1971

★ Eelanadu Pocket Diary 1971

★ கலண்டர் 1971

1971-ம் ஆண்டுக்குரிய 'ஈழநாடு' தினக்குறிப்பில் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

★ புதிய அரசாங்கம் பற்றிய தகவல்கள்.

★ சரித்திர சம்பந்தமான விடயங்கள்.

★ புவியியல், பொது அறிவு, விஞ்ஞானம் ஆகியவற்றிற்குரிய குறிப்புகள்.

★ போயா, அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறைகள் ஆகியன தினக்குறிப்பில் விசேடமாக இடம்பெற்றுள்ளன.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்

விபரங்களுக்கு: தினக்குறிப்பு 1971

'ஈழநாடு'

தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

சத்தியமும் அகிம்சையும் ஆகிய ராஜதந்திரத்தைத் தவிர வேறு எத்தத் தந்திரமும் என்னிடத்தில் இல்லை.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Ielanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna. Telephone: 889.

பிலவங்க சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 16-ந் திகதி (2-11-70)


## பகிரங்க விசாரணை வேண்டும்

நேற்று முன்தினம் இரவு சுமார் எட்டு மணியிலிருந்து இத் தலையங்கம் எழுதப்படும். பிற்பகல் இரண்டு மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் பஸ் போக்குவரத்துச் சேவைகள் நடைபெறவில்லை. இதை நீங்கள் வாசிக்கும்பொழுது பஸ் சேவை சீராகிவிடும் என்று நம்புகிறோம்.

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் பிரயாணி ஒருவர் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர் சிலரால் தாக்கப்பட்டதாகவும் இதைத் தொடர்ந்து பிரயாணிகளுக்கும் இ. போ. சபை ஊழியர்களுக்கு மிடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் இக் கைகலப்பில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் ஊழியர்களைப் பொலிசார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றதை ஆட்சேபித்தே பஸ் ஊழியர் வேலைநிறுத்தம் செய்ததாகவும் செய்திகள் கூறுகின்றன. பிரயாணிகளுக்கும் பஸ் ஊழியர்களுக்குமிடையில் நடைபெற்ற கைகலப்பின் விளைவாக ஊழியர்கள் சிலரும் பிரயாணிகள் சிலரும் காயமடைந்திருக்கின்றனர். பஸ் வண்டிகள் சிலவும் சேதமடைந்திருக்கின்றன. இச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் யார் என்பதையும் இச் சம்பவங்ளில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதையும் இவற்றுக்கான காரணமென்னவென்பதையும் ஆராய்ந்தறிந்து கண்டுபிடித்து அவர்கள் மீது தகுந்த நடவடிக்கையெடுத்துக் குற்றம்செய்தவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி, இனிமேலும் இது போன்ற அசம்பாவித சம்பவங்கள் நிகழாதபடி தடுக்க வழிவகை காணவேண்டியது பொலிசாரின் பொறுப்பும் கடமையுமாகும். குற்றம் செய்தவர்களை கண்டுபிடிப்பதற்குப் பொதுமக்களும் [illegible]

ஊழியர்களின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து பொறுமையாகவும் கண்ணியமாகவும் நடந்து தாமே துன்பப்படும் பிரயாணிகளும் பலர் உள்ளனர்.

நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் நடந்த சம்பவத்தில் ஒரு பிரயாணிக்கும் ஓர் ஊழியருக்குமிடையில்நடந்த வாக்குவாதத்தில் மற்றும் சில ஊழியர்கள் சம்பந்தப்படாமலிருந்திருந்தால் பிரயாணிகளும் சம்பந்தப்பட நேர்ந்திருக்காது. பஸ் நிலையத்தில் போதிய பொலிஸ் பாதுகாப்பு இருந்திருந்தாலும் நிலைமை இவ்வளவுக்கு மோசமாகியிருக்காதென்றும் கருத இடமுண்டு. ஆனாலும் கைகலப்புச் சம்பவம் பற்றித் தகவல் கிடைத்ததும் அங்கு விரைந்த பொலிசாருக்கு இ. போ. சபை ஊழியர்கள் ஒத்துழைப்பு அளித்து தவறு செய்தவர்கள் — அவர்கள் இ. போ. சபை ஊழியர்களாக இருந்தாலும் பிரயாணிகளாக இருந்தாலும் விசாரணைக்குள்ளாவதற்கு இடையூறு ஏற்படாத வகையில் கவனித்திருந்தால் நிலைமை மோசமாகாமல் தவிர்த்திருக்கலாம்.

இருவருக்குமிடையில் நடந்த வாக்குவாதம் பெரும் கைகலப்பாக மாறாமலும் ஆண்களும் பெண்களும் சிறுவரும் சிறுமியருமாக பஸ்நிலையத்தில் நின்று உயிருக்கு அஞ்சி அங்குமிங்கும் ஓடி அல்லற்படாமலும் இரவு முழுவதும் அங்கு அவதிப்படாமலும் தவிர்த்திருக்க வேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் தங்களை நம்பிவந்த இ. போ. சபை ஊழியர்களுடையதென்பதை அவர்கள் ஏற்றுத்தானாக வேண்டும்.

நிலைமையைச் சீராக்குவதற்கு இ. போ. சபை ஊழியர்களும் அதிகாரிகளும் மட்டுமல்ல பொது மக்களும் [illegible]

# கவர்னர் ஜெனரல் மாளிகையில் நடந்த காந்தி ஞாபக 'டிரஸ்ட்' அமைப்பு வைபவம்

கவர்னர்ஜெனரல் மாளிகையிலிருந்து அழைப்பொன்று கிடைத்தது. மகாதேசாதிபதி மே. த. கோபல்லவா அவர்களின் தலைமையிலே அவரது மாளிகையில் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று மகாத்மாகாந்தி நூற்றுண்டு விழா இலங்கை தேசியக்கமிட்டியின்கூட்டம்நடைபெறுவதாகவும், 'மகாத்மா காந்தி ஞாபக டிரஸ்ட், (இலங்கை) அப்போது அமைக்கப்படுமென்றும் அதற்குவருமாறும் கேட்டிருந்தார்கள். சில அன்பர்களுடன் அங்கு சென்றேன்.

அம்மாளிகைக்குச் சென்றபோது பழைய நினைப்புகள் சில வந்தன 1958-ம் வருடம் வகுப்புக் கலகம் ஏற்பட்ட காலத்தில் அதே மாளிகையில், பத்திரிகை ஆசிரியர்கள் மகாநாடுஒன்று நடைபெற்றது. சேர் ஒலிவர் குணத்திலகா அச்சமயம் கவர்னர் ஜெனரலாக இருந்தார். பிரதமர் பண்டாரநாயக்காவும் அங்கிருந்தார். பல டெலிபோன்கள் ஏககாலத்தில் மணி அடிக்கின்றன. சேர் ஒலிவர் ஒவ்வொரு டெலிபோனையும் எடுத்துப் பேசுகிறார், மலைநாட்டிலிருந்து ஒரு டெலிபோன் வருகிறது. கலகம் மூண்டால் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிடுகிறார் அவர். அவசரகால பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. கலக நிலையைப்பற்றி பார்லிமெண்ட் சபையில் பகிரங்கமாக விவாதிக்கப்படாதென்கிறார் சேர் ஒலிவர். விவாதிக்கத்தான் வேண்டுமென்று வற்புறுத்தினார் ஜனநாயக வாதியான பிரதமர் பண்டாரநாயக்கா. கலகம் மூண்டு பரவியதற்குக் காரணம்ஒரு பத்திரிகை ஸ்தாபனம்தான் என்று கோபத்துடன் அதன் பிரதிநிதியைப் பார்த்துக் குற்றம் சாட்டினார்பிரதமர். வானொலியில் பன்முறையும் அறிவிக்கப்பட்ட ஒரு தவறான செய்திதான் கலகத்தை மூட்டியதென்றனர் அந்தப் பத்திரிகை ஸ்தாபனத்தார்.

காரணம் எதுவாயினும் இனிக் கலகத்தை அடக்கி அமைதியை நிலைநாட்ட யாவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. பத்திரிகைத் [illegible]

மண்டபத்துக்குச் சென்றோம். வெள்ளைக்காரர் ஆட்சியின் சின்னங்கள் பல சுவரிலே பதித்திருந்ததைப் பார்த்தேன். பல நூற்றுண்டுகளாக அந்நியர்கள் இங்கிருந்துதான் நம் இலங்கையை ஆட்சி புரிந்தனர். அதே இடத்தில் யாரரெல்லாம் கூடி நம்முன்னோர்களை எப்படி அடக்கி ஆளுவதென்பதுபற்றி என்னென்ன ஆலோசனைகள் செய்தார்களோ! என்று என்மனம் ஏதேதோ எண்ணியது. பிரிட்டிஷ் அரசியல் உறவுகளை விட்டுவிட்டு, இலங்கை குடியரசாகப்போகும் இச்சமயத்தில் மகாத்மா காந்தியின் உபதேசங்களை நாடெங்கும் பரப்புவதற்காக ஒரு தர்ம ஸ்தாபனத்தை அதே இடத்தில் அமைக்க பல பல பிரமுகர்களும் கூடியிருப்பது அந்த இடத்தைப் புனிதப்படுத்துவதுடன், எதிர்கால இலங்கைக்கு நல்லதோர் சுபசூசகமாகவும் ஆரம்பமாகவும் இருக்கக்கண்டேன்

இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், எல்லாச்சமயத்தவரும், நாட்டின் எல்லாப் பகுதியினரும், எல்லாச்சமூகத்தவரும் பல ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் அங்கு அந்தக் கூட்டத்தில்

**ஐயாறன் எழுதியது**

ஒருமுகமாகக் கலந்து கொண்டு தங்களைத் தாங்களே கௌரவித்துக்கொண்டனர். ஸ்ரீ பௌத்த வாலிபர் சங்கம், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், அன்பு மார்க்க சங்கம். அகில இலங்கை மலாய்க்காரர் லீக், கிறிஸ்தவ வாலிபர் சங்கம், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், பார்சிகள்கிளப், இலங்கை தேசிய வர்த்தகர் சபை, தோட்ட அதிபர்கள் சங்கம், சிங்கள வர்த்தகர் சபை, சித்திக்காரர் சங்கம், மேமன் வர்த்தகர் சங்கம், பௌத்த [illegible] அகில இலங்கை [illegible] சங்கம், சோனக இஸ்லாமிய [illegible]

முக்கிய அரசியல் கட்சிகளும் ஒருமனதாக ஒத்துழைத்த இந்தக் கமிட்டிபோல், இவ்வளவு பலம்வாய்ந்த வேறு ஸ்தாபனம் இங்குண்டா என்பது மிக சந்தேகம். சேராதனவெல்லாம் சேர்ந்துள்ளன மகாத்மாகாந்தி மறைந்து 20 வருடங்களுக்கு மேலாகின்றன, ஆனாலும் அவரது பெயருக்குத்தான் எவ்வளவு சக்தி! பல்வேறுபட்ட மனங்களையும் ஈர்த்து ஒற்றுமைப்படுத்துகின்றது அவரது திருப்பெயர். உள்ளத்தாற் பொய்யாது ஒழுகியதால், அவர் உலகத்தார் உள்ளத்திலெல்லாம் இருக்கின்றார்.

நூற்றுண்டுவிழாச் சபையின் அமைப்பைப் பாருங்கள். இதன் போஷகர் மேதகு டபிள்யு கோபல்லவா மகாதேசாதிபதி, பிரதமர்ஸ்ரீமா பண்டாரநாயக்கா. திரு. டட்லி சேனநாயக்கா இவர்கள் உபபோஷகர்கள். செனேட்டர் ரத்னாயக்கா தலைவர், திருவாளர்கள் டி. பி. எல்லப்பொல, கே. ஸி. தங்கராசா உபதலைவர்கள். இலங்கை சர்வோதய தலைவர் ஏ. டி. ஆரியரத்ன. திரு. பாலித வீரசிங்க கூட்டுக் காரியதரிசிகள் திருவாளர்கள் தாமஸ் அமரசூரியா. கே. செல்வநாதன். ஜே. எவ். சங்குலி, எம். சுந்தரம், ஸி. பி. மோடி. முனிகுண்டன்மால் இவர்கள் கௌரவ பொக்கிஷதாரர்கள். இவர்களைத் தவிர மேலும் 34 பிரமுகர்கள் விழாச்சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

காரியதரிசிகளில் ஒருவரான ஆரியரத்ன அவர்கள் சர்வோதய கிராமப் பணிக்காக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக இருந்த மாக்ஸேஸேயின் பரிசான சுமார் ஒரு லட்சம் ரூபாய் பெற்றவர். இப்பரிசு பெற்றதால் இலங்கையின் புகழை அவர் உயர்த்தியுள்ளார். பெற்ற இப்பரிசுத்தொகை அவ்வளவையும் அவர் அப்படியே சர்வோதய இயக்கத்துக்கு அளித்துவிட்டது செய[illegible]ரிய செயல். மற்றொரு காரியதரிசி பாலித வீரசிங்க அவர்கள் செனேட்சபையின் திற[illegible] 'கிளர்க்' எனும் காரியதரிசி. முன்னர் மாவட்ட நீதிபதியாக இரு[illegible]வர் [illegible]

இலங்கையிலே மகாத்மா நூற்றுண்டு விழா யோசனை யாருடைய உள்ளத்தில் வித்திட்டது தெரியுமா? எஸ். கே. வேலாயுதபிள்ளை அவர்களின் உள்ளத்தில்தான். சட்டை அணியாது மகாத்மாவைப்போல் கதர் உடை தரித்து அக்கூட்டத்தில் காட்சியளித்தது அவர் ஒருவரே. விழாவைப்பற்றிய யோசனையை அவர் கே. ஸி. டி. அவர்களிடம் கூற, அவர் செனேட்டர் ரத்னாயக்கா முதலியவர்களை இதில் ஈடுபடுத்தியதாயும், பிறகு இது ஒரு பெரிய தேசீய சபையாக வளர்ந்ததாகவும் அறியவந்தேன். ஆங்கிலம், சிங்களம் இம்மொழிகள் தெரியாவிட்டாலும், திரு. பிள்ளையவர்கள் வட இந்தியாவில் வெகுவாகச் சுற்றுப்பிரயாணம் சென்று பல சர்வோதய மாநாடுகளில் கலந்து கொண்ட சர்வோதயத் தலைவரான ஸ்ரீஜயப்பிரகாச நாராயணனை இங்கு வரவழைத்ததற்கு முக்கிய காரணமாக இருந்தவர், பிரம்மச்சாரியான அவரால் யாழ்ப்பாணத்தின் புகழ் இந்தியாவிலும் உயர்ந்துள்ளது. தமக்கென வாழாமல், காந்தியத்துக்காகவும், பிறருக்காகவும் வாழ்கின்ற அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இம்மாதிரி ஏதாவது விழா நடப்பின் சாதாரணமாக வசூலாகும் பணத்துக்குமேல் அதிகமாகச் செலவுகாட்டி, அத்துடன் எல்லாமே முடிந்துவிடக்கூடும். ஆனால் மகாத்மா நூற்றுண்டு ஜயந்தி விழாவுக்காக வசூலான தொகை மொத்தம் ரூ. 87 ஆயிரமென்றும், அதில் செலவெல்லாம்போக மிச்சம் 47 ஆயிரம் என்றும் அறிய மிக மகிழ்ச்சியாக இருந்தது. பொக்கிஷதாரரான திரு. செல்வநாதன் இக்கணக்குகளை அறிவித்தார். அடக்கமும் அறிவும், பண்புமுள்ள அவரது பணி கிடைக்க முடிந்தது. அச்சபையின் அதிஷ்டமென்றே கூறவேண்டும். மகாத்மா காந்தி நினைவு டிரஸ்டுக்கும் அவரே பொக்கிஷதாரராகத் தெரிவுசெய்யப்பெற்றுள்ளார். அதனால் அந்த ஸ்தாபனத்தின் பணிகளும் மேலானமுறையில் நன்கு [illegible]

காந்தியின் நூற்றுண்டு விழாவுக்கு வசூலான பணத்தில் ரூபா 47 ஆயிரம் மிச்சமானதால். அப்பணத்தைக் கொண்டு. ஒரு டிரஸ்ட் சபையை நியமித்து. மகாத்மாவின்கொள்கைகளையும், உபதேசங்களையும், நோக்கங்களையும் இலங்கையில் தொடர்ந்து நீடித்து நடத்த ஒழுங்குசெய்தது பெரியகாரியம் இதற்குப் பொறுப்பானவர்களை எல்லாம் நன்றியுடன் நாட்டு மக்கள் பாராட்டவேண்டும். அன்று டிரஸ்ட் சபைக்குக் கீழ்க்கண்டவர்கள் தெரிவு செய்யப்பெற்றனர். சபையின் தலைவர் செனேட்டர் ஏ. ரத்னாயக்கா, காரியதரிசி பாலித வீரசிங்க, பொக்கிஷதாரர் கே. செல்வநாதன். அச்சபைக்கு திருவாளர்கள் தாமஸ் அமரசூரிய. எஸ். சோமசுந்தரம், முன்னாள் நீதியரசர் டி. எஸ். பெர்னாண்டோ, டி. பி. எல்லப்பொல, கே ஸி. தங்கராசா, மாக்கான் மரக்கார், எஸ். சிவசுப்பிரமணியம், எஸ். தொண்டமான், ஏ. அஸீஸ், ஸி.வி.வேலுப்பிள்ளை, ஆரியரத்ன, நேசையா, வேலாயுதபிள்ளை துரைசிங்கம், ஹமீத், முதலியார் சின்னத்தம்பி, எஸ். வி. மணி, சிறில் டி சொய்ஸா உள்ளிட்டு 24 பிரமுகர்கள் இடம்பெற்றுள்ளனர்.

பல சட்ட மேதைகள் அங்கு கூடியிருந்தார்கள். ஒரு சிறிய விஷயம் அவர்களிடம் சிக்கி எவ்வளவு பிரமாதப்பட்டது தெரியுமா! மனதுக்குள் சிரித்து விட்டேன். இதைப் பற்றியும், டிரஸ்ட் அமைப்பைப் பற்றியும் இனி பார்ப்போம்.

0 0 0

படைக்கலமாக வுன்னுமத்
தெழுத்தஞ் செனுவிற்
கொண்டேன்
இடைக்கல மல்லே னெழு
பிறப்பு முனக்காட்
செய்கின்றேன்
துடைக்கினும் போகேன்
றொழுது வணங்கித்
தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டாயணி
தில்லைச் சிற்றம்பலத்
தரனே

— அப்பர் சுவாமிகள்

......

## நல்லை ஆதீனத்தில் ஸ்கந்தஷஷ்டி

யாழ்ப்பாணம், திங்கள் ஸ்கந்தஷஷ்டி ஆரம்பதினமான கடந்த சனிக்கிழமை தொடக்கம் இம்மாதம் 5ந் திகதிவரை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்கந்த ஷஷ்டிவிழா கொண்டாடப்படுகிறது. தினசரி நிகழ்ச்சிகள் வருமாறு:

காலை 4-30 மணிக்கு சுப்பிரமணிய சுப்ரபாதமும். 5-15க்கு ஞானப்பால்பூஜையும், 6-30க்கு காலசந்தியும், 8-09க்கு ஸ்கந்தஷஷ்டி கவசபாராயணமும் 10மணிக்கு சண்முகப்பெருமானுக்கு அபிஷேகமும் நடைபெறும். பகல் 11-30க்கு உற்சவமும் 12 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

மாலை 3 மணியிலிருந்து 4-30 வரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரானின் 'ஸ்ரீசுப்பிரமணிய பராக்கிரமம்' இன்னிசை விரிவுரை நிகழும். 4-30க்கு வீதி பஜனை. 6-00 மணி இரண்டாம் காலம். இரவு 8-30 முதல் 10-00மணி வரை நல்லூர்க் கந்தன் கோவில் முன்றலில் சுவாமிகளின் திருச்செந்தூர்ப் புராண விரிவுரை.

5ந் திகதி அதிகாலை 5-30 மணிக்கு முருகப்பெருமான் சிவபூஜைக்காட்சியும், மாலை 4-30 மணிக்கு திருக்கல்யாணக் காட்சியும் நடைபெறும்.

— —

## வடபகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபை ஊழியர்களுக்கு பொலிஸ்பாதுகாப்பு அளிக்கப்படுமென்றும், யாழ். பஸ் நிலையத்தில் நடந்த அசம்பாவிதம் பற்றி பூரண விசாரணை நடத்தப்படுமென்றும் பொலிஸ்தரப்பில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை தொடர்ந்து வேலை நிறுத்தத்தை கைவிட பஸ்ஊழியர்கள் சம்மதித்தனர்.

கோண்டாவில் பஸ் டிப்போவில் பொலிஸ் இன்ஸ் [illegible]

கள் ஆர். ஆர். தர்மரத்தினம், எம் ஆலாலசுந்தரம் ஆகியோரும் மற்றும் பஸ் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இன்ஸ்பெக்டர் மாணிக்கம், வாக்குறுதியளித்ததை தொடர்ந்த இன்று காலை 4 மணி தொடக்கம், மீண்டும் பஸ்சேவையை ஆரம்பிக்க பஸ் ஊழியர்சம்மதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கள் நிகழாதபடி தடுக்க வழிவகை காணவேண்டியது பொலிசாரின் பொறுப்பும் கடமையுமாகும். குற்றம் செய்தவர்களை கண்டுபிடிப்பதற்குப் பொதுமக்களும் தங்கள் சக ஊழியர் ஒரு சிலர்தான் தவருக நடந்திருந்தாலும் அவர்களைத் திருத்தவும் அவர்கள் செய்த தவறுக்காகத் தண்டனை அனுபவிக்கவும், தங்கள் நற்பெயரைக் காப்பாற்றவும் பொலிசாருடன் இ. போ. சபை ஊழியரும் பொது மக்களும் குறிப்பாகப் பிரயாணிகளும் ஒத்துழைப்பும் உதவியும் அளிக்க வேண்டியதும் அவர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியர்கள் அனைவரும் தவருக நடந்து கொள்பவர்களல்லர்; பிரயாணிகள் அனைவரும் தவருக நடந்துகொள்பவர்களுமல்லர். ஒரு சிலர் தவருக நடந்துகொள்வதால்தான் அனைவருக்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறது; பலரும் பாதிக்கப்படுகிருர்கள். பிரயாணிகளின் நலனைக் கருத்தில்கொண்டு பணியாற்றும் ஊழியர்களுக்கள் ஏற்றுத்தாருக வேண்டும்.

நிலைமையைச் சீராக்குவதற்கு இ. போ. சபை ஊழியர்களும் அதிகாரிகளும் மட்டுமல்ல பொது மக்களும் தகுந்த முயற்சி மேற்கொள்ள வேண்டும், இதேசமயம் இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைந்துள்ள 'லொட லொட்டை பஸ்களை இங்கிருந்து அகற்றி போதிய நல்ல பஸ்களை இங்கு அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் இ. போ சபை மேலிடம் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

யாழ்ப்பாணத்தில் இ. போ சபை ஊழியர்கள் பற்றிக் குறைகுற்றம் சொல்லப்படுவது சமீபகாலத்தில் அதிகரித்து வந்துள்ளது உண்மை நிலைமையை அறியவும் இது போன்ற தவறுகள், குறைகள் இனியும் நேராமல் தடுக்கவும் இ. போ. சபைக்குச் சேதம் ஏற்படாமலும் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு யாழ். மேயர் கோருவது போல் இச்சம்பவம் பற்றி பகிரங்க விசாரணை நடத்துவதே சிறந்தது.

ங்கை ஸ்தாபனத்தார்.

காரணம் எதுவாயினும் இனிக் கலகத்தை அடக்கி அமைதியை நிலைநாட்ட யாவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. பத்திரிகைத் தணிக்கை கடுமையாக இருந்தது. இதை ஆட்சேபித்து பல பத்திரிகைகள் தலையங்கம் எழுதாமல்விட்டன. பல வகுப்புவாத அறிக்கைகளை சில தலைவர்களின் பெயரால் அப்பத்திரிகை ஸ்தாபனம் அப்படியே வெளியிட்டு வந்தது. வகுப்புவாதம் முதலிய பலபல சங்கடங்களுக்கு அரசியல் வாதிகளே காரணம் என்று நினைத்திருந்தேன். ஆனல் அவர்களது வகுப்புவாதப் பேச்சுகளை வெளியிட்டு அந்த விஷத்தைப் பரப்பும் பத்திரிகைகளும் பத்திரிகைக்காரர்களும்தான் பெரிதும் காரணம் என்பதை அன்று நடந்த கூட்டத்தில்தான் உணர்ந்தேன்; சென்ற 12 வருடங்களிலே எவ்வளவு மாறுதல்கள்! சேர் ஒலிவர் இருந்த இடத்தில் மே. த. கோபல்லவா அவர்கள் இருக்கின்ருர்கள். அரசாங்கமும், பிரதமர்களும் மாறினும் அவர் மட்டும் மாருமல் எல்லாருடைய நம்பிக்கையையும் மதிப்பையும் பெற்று ராணி மாளிகையிலிருந்து வருகின்ருர்.

தேசிய உடையில் இருந்த அவரும் அவரது துணைவியாரும் எங்களை எல்லாம் அன்புடன் அழைத்தனர். பலரிடமும் அவர் வெகுஎளிமையாகப் பழகிப்பேசினுர் முதலில் ஒரு சிற்றுண்டி விருந்து நடந்தது. மேசைமீது பல பலகாரங்களும் வைத்திருந்தனர். மாமிசம் கலந்த உணவுகளும் அங்கு இருந்தன. மகாத்மாவோ சுத்த சைவ உணவை வற்புறுத்தி அதற்காகப் பிரசாரமும் செய்தவர். அவரது பெயரால் நூற்றுண்டு விழாச் சபையார் நடத்திய இந்த உபசாரத்தில், மகாத்மாவின் கொள்கைக்கு சம்மதமான உணவுகளையே வைத்திருப்பின் அதிகப் பொருத்தமாக இருந்திருக்கும், இனியாவது இச்சபையார் இவ் விஷயத்தில் அதிக கவனமாக இருத்தல் நல்லது என்பதை வலியுறுத்தவே இதை இங்கு குறிப்பிடலானேன்,

சிற்றுண்டி விருந்து முடிந்ததும், மச்சிலிருந்து கீழே தோட்டப்புறமுள்ள ஒரு

சங்கம், சிங்கள வர்த்தகர் சபை, சித்திக்காரர் சங்கம், மேமன் வர்த்தகர் சங்கம், பௌத்ததியசாபிகள் சபை, அகில இலங்கை சோனகர் சங்கம், சோனக இஸ்லாமிய கலாசார விடுதி, அகில இலங்கை இந்து காங்கிரஸ், முஸ்லிம் லீக், கேரள சங்கம், இலங்கை கத்தோலிக்க யூனியன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இராமகிருஷ்ண மிஷன், விவேகானந்த சபை, இலங்கை வர்த்தகர் சபை, சட்ட அறிஞர் சபை, இந்திய வர்த்தகர் சங்கம், செட்டியார் சங்கம், சர்வசமயகாங்கிரஸ், கண்டி வாலிபர் சங்கம், இலங்கை மகாபோதி சங்கம், சர்வதேச இஸ்லாமிய ஸ்தாபனம், காந்தி சேவா சங்கம், ஸ்ரீலங்கா ஜாதிக சர்வோதயசிரமதான சங்கமயவும்

செயல். மற்ெருரு காரிய தரிசி பாலித வீரசிங்க அவர்கள் செனேட்சபையின் திறமைமிக்க "கிளர்க்" எனும் காரியதரிசி. முன்னர் மாவட்ட நீதிபதியாக இருந்தவர் பிரம்மச்சாரி, எந்தப் பணியில் அவர் ஈடுபட்டாலும் அதை முழுமனதுடன் திறமையாகச் செய்பவர். மகாத்மாகாந்தியின் நூற்றுண்டு விழா வைபவம், கொழும்பு உள்ளிட்டு இலங்கை எங்கும் வெற்றியாகக்கொண்டாடப்பட்டதற்கு அவரே பெரிதும் காரணம் எனின் அது தவருகாது, 'மகாத்மா காந்தி ஞாபக டிரஸ்டி'க்கும் இவ்வுத்தமரையே காரியதரிசியாகத் தெரிவுசெய்திருப்பதால் இந்த ஸ்தாபனத்தின் பணிகளும் வெற்றியாக நடைபெறுமென்றே கொள்ளலாம்.

கூறவேண்டும். மகாத்மா காந்தி நினைவு டிரஸ்டுக்கும் அவரேபொக்கிஷதாரராகத் தெரிவுசெய்யப்பெற்றுள்ளார். அதனுல் அந்த ஸ்தாபனத்தின் பணிகளும் மேலானமுறையில் நன்கு நடைபெறுமென்றே கொள்ளலாம்.

இவ்வித ஈழாக்கள் பேச்சுடனும், விருந்துடனும் முடிந்துவிடுவதே வழக்கம் பின்னர் எல்லாம் மறந்து விடும். ஆனல் மகாத்மா

குறுதியை தொடர்ந்து வேலை நிறுத்தத்தை கைவிட பஸ்ஊழியர்கள் சம்மதித்தனர்.

கோண்டாவில் பஸ் டிப்போவில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மாணிக்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் மேற்கண்ட வாக்குறுதி அளிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பஸ் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளான திருவாளர்

இன்ஸ்பெக்டர் மாணிக்கம், வாக்குறுதியளித்ததை தொடர்ந்த இன்று காலை 4 மணி தொடக்கம், மீண்டும் பஸ் சேவையை ஆரம்பிக்க பஸ் ஊழியர்சம்மதித்தனர். பஸ் நிலையங்களில் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்கப்படுமென்று இன்ஸ்பெக்டர் மாணிக்கம் ஊழியர்களிடம் தெரிவித்தார். (நல். நிரு)

# உத்தரிப்பு ஸ்தல ஆத்மாக்களுக்காக வேண்டிக்கொள்வோம்

இன்று கத்தோலிக்க உலகு சகல ஆத்துமக்கள் திருநாளைக் கொண்டாடுகிறது இவ்வுலகில் எம்மைப்போல் வாழ்ந்து தமது வாழ்வின் முடிவில் ஆன்மாவைத் தூய்மையாக்க உத்தரிப்பு ஸ்தலத்தில் கிடந்துகோர நெருப்பில் வேதனைப்படும் ஆன்மாக்களை இன்றையதினம் விசேடமாக நினைவு கூருகிறது.

உத்தரிப்பு ஸ்தல ஆத்துமாக்கள் இவ்வுலகில்உள்ளவர்களின் உதவியை நாடி நிற்கின்றனர். ஏனெனில் அவர்கள் தமது சுயவலிமையால் எதையும் பெறமுடியாதோராய் இருக்கின்றனர், இவ்வுலகில் உள்ளோரின் மன்ருட்டுகளே அவர்கள் விடுதலைபெற்று மோட்ச இன்பத்தைப்பெற உதவும்.

இந்த ஆத்துமாக்களை நினைவூட்டும் வகையில் கார்த்திகை மாதம் முழுவதும் மாலை நேரத்தில் ஆலயமணி ஒலித்து அவர்களை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. தம் தவறுகளுக்காக வேதனைப்படும் ஆத்துமாக்களுக்கு வேண்டுதல் மூலம் உதவுவது எமது கடமைகளில் ஒன்ருகும் நாமும் ஒருநாள் அவர்களைப்போன்று இந்தவேதனைகளை அனுபவிக்கநேரிட்டால் அவர்கள் தமது வேதனைகளை அனுபவித்து முடிந்தபின் நித்திய இன்பமான மோட்சத்தில்இருக்கும்போது எமக்காக உதவி புரிவர்.


இதுமட்டுமல்லாமல் உத்தரிப்புஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமாக்கள் மூலம் நாம் இவ்வுலகில் கேட்கும் சகாயங்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும், எப்படியெனில் வேதனைப்படும் இவர்கள் தமக்குத்தாமே எதுவும்செய்யமுடியாத நிலையில் உள்ளனர். ஆனல்இப்பூவுலகில் உள்ளவர்களுக்குச் சகாயங்களைப் பெற்றுக் கொடுக்கும் வல்லமையுடையவர்களாக விளங்குகின்றனர்.

இன்றையதினம் ஆலயங்களில் இவர்களுக்காகவிசேட வழிபாடுகள் நடைபெறுகின்றன. சேமக்காலைகளிலும் இவர்களுக்காக வழிபாடுகள் வேண்டுதல்கள், விசேட சடங்குகள் இடம்பெறும், மக்களும் கூட்டம் கூட்டமாகச் சென்று இறந்த தமது பெற்ருேர், உற்ருர், நண்பர் மற்றையோரின் கல்லறைகளைத் தரிசித்துவேண்டுதல் புரிவர். இம்மாதம் முழுவதும் இவர்களை நினைவுகூரும் வகையில் ஆலயங்களில் துக்கமணி மாலை நேரத்தில் ஒலிக்கும்.

எனவே எமது உற்ருர் உறவினர் நண்பர்களுக்காக வேண்டி அவர்களின்வேதனைகளை நீக்கி நித்திய இன்பத்தை அவர்களுக்குப்பெற்றுக்கொடுப்பதுடன் அவர்களின் உதவி சகாயங்களைப் பெற அவர்களுக்காக என்றும் வேண்டுதல் புரிவோமாக!

இ. பேர்னுப்

# 'ஈழநாடு' றமழான் குரலொலி



"உங்களிடம் என் அடியார்கள் என்னைப்பற்றி வினவினுர்களென்ருல் (நபியே! கூறுக) நிச்சயமாக நான் மிகவும் சமீபத்தில் இருக்கின்றேன் (என்று) பிரார்த்திப்பவனின் வேண்டுகோளை (து ஆவை) அவன் பிரார்த்தித்தால்நான்விடையளிக்கின்றேன். எனவே என (துகட்டளை) க்குவிடையளியுங்கள். மேலும் என்னை நம்புங்கள். (இப்படிச் செய்யும்) அவர்கள் நேரிய பாட்டையில் (ஹிதாயத்தில்)நடந்தவர்களாகலாம்" (சதகல்லாஹுல்அழீம்)

(கலாமுல்லாஹ்: 2-ம் அத்தியாயம் 186 ம் வசனம்)

அண்ணலாரை அண்மிய ஓர் குழுவினரை அவர்களை விழித்து, யாரசூலல்லாஹ்! எங்களின் இறைவன் சமீபத்தில் இருக்கின்ருனு? அப்படியானல் நாங்கள் அவனிடம் இரகசியமாய் வேண்டிக்கொள்கிருேம். அல்லது தூரத்திலிருக்கின்ருனு? அப்படியானல் அவனை குரல்கொடுத்தழைக்கின்ருேம் என்றனர். அதுபோழ்து மேலுள்ள இறைவாக்கு இறங்கிற்று.

எஜமான் ஒருவனின் இல்லத்தில்அத்தனை ஏவலையும் ஏற்று உண்மை விசுவாசத்தோடு நடக்கும் ஊழியன் மீது எஜமானனுக்கு அன்பும் பாசமும் இருக்கத்தான் செய்யும். இதன் காரணமாய் எஜமான் ஊழியனுக்கு பரிசில்கள், சலுகைகள், பதவிஉயர்வு என்பவற்றை வழங்கலாம். அதே பரிசிலையும், சலுகையையும், பதவி உயர்வையும் எஜமான் வீட்டில் இடர் செய்து விசுவாசமற்ற முறையில் நடக்கும் ஊழியனுல் பெறமுடியாது. இதேபோன்று தன் பிரார்த்தனை ஏற்கப்படாவிடத்து இறைவனைக் குறைகூறி என்ன லாபம்? அவன் ஆணைக்கு அடிபணிய வேண்டாமா? இதனுல்தான் எனது கட்டளைக்கு விடையளியுங்கள்" என்கின்ருன்.

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ ஹசன் [கபூரி]

**தொழுகை நேரங்கள் :-**

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-38 | 5-58 | 12-20 | 3-17 | 5-52 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-12 | 4-23 |

# யாழ். நகரில் 3 தினங்களுக்கு ஸ்ரீ பார்த்த சாரதி சொற்பொழிவு

பம்பாய் சின்மய கருமாலயப் பிரதான ஆசிரியர் ஸ்ரீ ஏ.பார்த்தசாரதி கடந்த மாதம் இலங்கைக்கு வந்து தலைநகரில் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்திலும் மற்றும் பல இடங்களிலும் அருமையான சமய சொற்பொழிவுகள் நிகழ்த்தினுர்.

தலைநகரில் மட்டுமன்றி யாழ். நகரும் அவரின் சொற்பொழிவுகளைக் கேட்டு ஆத்ம சுத்தி பெறகொடுத்து வைத்துள்ளது. இன்று தொடக்கம் 3 தினங்களுக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஸ்ரீ பார்த்தசாரதியின் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன. 'இவர் கடவுளும் சமயமும்' என்ற பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

## பல்துறை அறிஞர்

ஸ்ரீபார்த்தசாரதி தனிப்பட்ட ஒரு துறையில் மட்டும் தனது அறிவை வளர்த்துக் கொண்டவரல்ல! கலை, விஞ்ஞானம், சட்டம் ஆகிய துறைகளில் தேர்ச்சி பெற்றுப்பட்டங்கள் பெற்றவர் சென்னை பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று கலை; விஞ்ஞான சட்டத்துறைகளில் பட்டம் பெற்றுப் பின்னர் சர்வதேசசட்டம் குறித்து லண்டன் பல்கலைக் கழகத்தில் உயர்பட்டப்படிப்புப் படித்தார்.

இவ்வாறு சகலதுறைகளில் தேர்ச்சி பெற்றபின்னர் இவர் எஸ்ஸோ ஸ்ராண்டப் எண்ணெய் கம்பனியில் 9 வருடங்கள் கடமையாற்றினுர். இங்கு கடமையாற்றும் காலத்தில் 1953-ம் ஆண்டு சுவாமி சின்மயானந்தாவைச் சந்தித்து அவருடன்நெருங்கிய தொடர்பு கொண்டு சமயப்பணியிலும் பெரும் ஈடுபாடு கொண்டார். சமயத்துறையில் அவருக்கு ஏற்பட்ட பற்றுதல் காரணமாகச் சமயப்பணி செய்ய ஆர்வம் கொண்டு தனது பதவியை துறந்து சுவாமி சின்மயானந்தாவின் சாந்திபணி சாதனுலயத்தில் சேர்ந்தார். அன்று தொட்டு இன்றுவரை ஸ்ரீ பார்த்தசாரதி சின்மய கருமாலயத்தில் வேலைகளைச் கவனித்து வருகிருர். இக்கருமாலயத்தின் தொண்டு இந்தியாவில் மட்டுமன்றி உலகெங்கும் பரவி வருகிறது.

## சிறந்தபோதனை

உலகின் தற்போதைய சூழ்நிலையில் வேதாந்தத்தத்துவங்கள் இன்றியமையாததாகவுள்ளன என்பதை உணர்ந்த இவ்வாலய ஆசிரியரான ஸ்ரீ பார்த்த சாரதி வேதாந்த தத்துவங்களை தனது சிறந்த போதனைகளின் மூலம் பரப்பிவருகிருர். இவ்வேதாந்த தத்துங்களை அடிப்படையாகக் கொண்டு 3 நூல்களை இவர் எழுதியுள்ளார்.

மேற்படி கருமாலயமாணவர்களுக்கு ஸ்ரீ பார்த்தசாரதி கீதை, உபநிடத போதனைகளை ஒழுங்காக நடத்தி வருவதோடு வெளிநாடுகளிலும் இத்தத்துவக் கொள்கைகளை போதித்து வருகிருர். 1968-ம் ஆண்டு ஸ்ரீ பார்த்தசாரதி தூரகிழக்கு நாடுகளுக்குச் சென்று பலசொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார் தபால் மூலமும் கற்க விரும்புபவர்களுக்கு தபால்மூலம் போதிக்கிருர்.

## பலநாடுகளுக்கு விஜயம்

திரும்பவும் இவரின் போதனைகளைக் கேட்கும் ஆவலுள்ள தூர கிழக்கு நாடுகள் விடுத்த அழைப்பையேற்று தற்போது ஸ்ரீ பார்த்தசாரதி தூரகிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார். சிங்கப்பூர். ஹொங்கொங், யப்பான், கொறியா ஆகிய இடங்களில் சொற்பொழிவாற்றியுள்ள இவர் தற்போது நம் நாட்டின் அழைப்பையும் ஏற்று இங்கு வந்துள்ளார்.

இவரது அருமையான தத்துவ போதனைகளைக் செவிமடுத்துப் பயன்பெற மேற்கும் இவரை அழைக்கிறது என்ருல் இவரதுதத்துவஅறிவையும் சொற்பொழிவுத் திறனையும் பற்றிக் கூறவேண்டியதில்லை. ஐரோப்பா ஐக்கிய அமெரிக்கா, மேற்கிந்திய தீவுகள் ஆகியனஇவருக்கு அழைப்பு விடுத்துள்ளன. இவ்வழைப்பை ஸ்ரீ பார்த்தசாரதி ஏற்றுள்ளார். அடுத்தாண்டு அங்கு சென்று அந்நாடுகளின் விருப்பைப் பூர்த்தி செய்யவுள்ளார்.

......

## பழைய ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## லீவுகள் ரத்து

பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பிறப்பித்துள்ள புதிய உத்தரவின் படி பொலிஸ், ராணுவம் ஆகியவற்றின் லீவுகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. அவசரத் தேவைகளுக்கு மட்டும் லீவுகள் வழங்கப்படும். நேற்று நள்ளிரவு வெளியிடப்பட்ட இரவு 'கஸட்' மூலம் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகலிலிருந்து கொழும்பு மாவட்டத்திலுள்ள சகல சாராயத் தவறணைகளும் பூட்டப்பட்டுள்ளன. இன்றும் திறக்கப் படமாட்டாது. பழைய நோட்டுகளைப் பெருந்தொகையாகப் பதுக்கி வைத்திருக்கும் ஆசாமிகள் தவறணைகளில் பெருந்தொகையான சாராயப் போத்தல்களை வாங்கிக் கொள்வதை முறியடிப்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ந் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org